போன் நெ. 15. விலை 2 அணு REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 5-9-54 | இதழ் 10

அரசியல் “கொடும்பாவி”

ஒரு இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தலைமை வகித்தார்.

என்ற பீடிகையோடு ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தால், ஆமாம், இருக்கலாம்! பிரதமர் நேரு பண்டிதர் விஜயம் செய்திருப்பார், அல்லது ராஷ்ட்ரபதி பிரசாத் ராஜேந்திரர் பவனிவந்திருப்பார், எனவே ஒரு லட்சம் மக்கள் குழுமினர், காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அந்த வைபவத்துக்குத் தலைமை தாங்கி இருப்பார், இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது—அதிலும் சுதந்தர இந்தியாவின் சூரியனும் நேருவும், சந்திரனும் பிரசாத்தும் எங்காவது ஒரு இடத்துக்கு விஜயம் செய்கிறார்கள் என்றால், ஒரு இலட்சம் என்ன! பல இலட்சம் கூடுமே! இதைப்பற்றிப் பிரமாதமாகப் பேசவந்துவிட்டாயே என்று தான் கேட்கத் தோன்றும், எந்தக் காங்கிரஸ்காரர்களுக்கும்.

இந்தக் காலத்தில் காங்கிரஸ் தலைவர்களைத் தவிர வேறு யாருக்கு இப்படிப்பட்ட மக்கள்வெள்ளம் ஒன்று சேருகிறது?

ஜனநாயக ஆட்சித் தலைவர்கள் வருகிறார்கள் என்றால், ஜனநாயக விரோதிகள் தவிர, மற்றெல்லோருமே ஒன்று சேர்ந்து, அவர்களை வரவேற்பது புதுமைக்குரிய ஒன்றல்லவே!

அண்மையில், ‘நமது’ ராஷ்ட்ரபதி ஒரு ஊருக்கு விஜயம் செய்த போது எத்தனை இலட்சம் மக்கள் அவரை வரவேற்றனர் என்பதைப் பத்திரிகைகளில் பார்த்த பின்னரும் கூட உனக்குச் சந்தேகம் வந்துவிட்டதே என்பதை எண்ணும்போது தான் என்னால் சிரிப்பை அடக்கிக் கொள்ளமுடியவில்லை என்கிறார், ஒரு காங்கிரஸ் அன்பர்.

இப்படியாக, காங்கிரஸ் தலைவர்கள் எங்கு சென்றாலும், எப்போது சென்றாலும், எதற்காகச் சென்றாலும், அவர்களை வரவேற்க ஆயிரமாயிரம் மக்கள், அலைமோதுவது போல் ஆர்ப்பரித்து ஆடம்பரமாக வரவேற்கும் காட்சியைத் தான் நாம் நாள்தோறும் காண்கிறோமே! இதனை ஒரு அதிசயமாக எண்ணி, “ஒரு இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்! காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அதற்குத் தலைமை தாங்கினார் என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்ததும் பரவசப்பட்டு, என்னிடம் கூறவந்துவிட்டாயே” என்று அந்தக் காங்கிரஸ் தோழர் கேட்கிறார்.

ஆனால், அந்த ஒரு இலட்சம் மக்கள் எதற்காகக் கலந்து கொண்டனர்? அதற்குக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஏன் தலைமைவகித்தார்என்ற விபரங்களை அந்தக் காங்கிரஸ் தோழருக்கு விளக்கமாகக் கூறியது தான்தாமதம்,உடனே அவர் “போய் வருகிறேன்” என்றுகூடக் கூறாமல் நழுவிவிட்டார்.

‘லஞ்சப்பேய்’ கொடும்பாவி ஒன்று நகரின் பல்வேறு தெருக்கள் வழியாக இழுத்துச் செல்லப்பட்டு, நாகபுரி பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவரால் எரிக்கப்பட்டது,

மக்களைப் பாதிக்கும் வேறு பல கேடுகளைக் குறித்தும் கொடும்பாவிகளும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. சுமார் ஒரு இலட்சம் மக்கள் இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டனர்”

என்ற செய்தியைத் தாங்கி 30-8-54-ல் வெளிவந்த தினத்தாளை அந்தக் காங்கிரஸ் நண்பரிடம் காண்பித்த உடனேதான் அவர் என்னிடம் ஏதும் பேசாமல் போய் விட்டார்.

லஞ்சப் பேய்!

இன்னும் வேறு பல பேய்கள்!!

இவற்றிற்குத் தனித் தனிக் கொடும்பாவிகள்!

இவற்றை ஊர்வலமாக இழுத்துச் செல்கின்றனர், மக்கள்!

இந்த ஊர்வலத்தில் ஒரு இலட்சம் மக்கள் கலந்துகொள்கின்றனர்!

காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இந்த ஊர்வலத்தை நடத்திச்சென்று கொடும்பாவிகளை எரிக்கிறார்!

இது, எந்தக் காங்கிரஸ் தோழரையும் தலைகுனியவைக்கும் ஒரு பரிதாபகரமான செய்தியாகும். காங்கிரஸ்காரர்களை மட்டுமல்ல,

ஜனநாயகப் பண்பில் அக்கரை கொண்டு இந்த நாட்டில் பிறந்த எவரையும்தான் இப்படிப்பட்ட செய்திகள் திடுக்கிட வைக்கும்.

யார், லஞ்சப் பேய், வேலையில்லாத் கொடுமை, வறுமைப்பிணி ஆகியவற்றை ஒழிப்பதே நமது முதல் வேலை என்று முழக்கமிட்டு முடிசூடா மன்னர்களானர்களோ, அவர்களுடைய ஆட்சியில்தான் லஞ்சப் பேய் தலைவிரித்தாடுகிறது. கொடும்பாவி கட்டி இழுத்துக் கொளுத்தும் அளவுக்கு வேதனையை உண்டாக்கியிருக்கிறது.

நமது நாட்டில் நீண்ட காலமாகவே கொடும்பாவி கட்டி இழுப்பது என்ற மூடப் பழக்கம் இருந்து வருகிறது. அதாவது நாட்டில் மழை இல்லாது போனால், அதனைத் தங்கள் பிழைப்புக்குச் சாதகமாக்கிக்கொள்ளும் ஒரு சிலர், வானத்தில் மழையின் அறிகுறி தென்படும் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்து, உடனே கொடும்பாவி கட்டித் தெருத்தெருவாக இழுத்துச் செல்வார்கள். அப்போது, மழை வரும் என்பதால் மகிழ்ச்சி அடைந்த மக்கள், அவர்களுக்கு ஏதாவது தருவார்கள், அவர்களும், அதனைக் கொடும்பாவியைத் தகனம் செய்யும் செலவுக்கென்று கூறி வாங்கிக்கொள்வார்கள்.

ஆனால், அந்தக் கொடும்பாவி கட்டி இழுக்கும் முறை இப்போது எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்தப்படுகிறது. கொடும்பாவி கட்டி இழுப்பது சரியா? தவறா? என்பதையல்ல நாம் ஆராய்வது. கொடும்பாவி கட்டி இழுத்தால் மழைபெய்யும் என்ற நம்பிக்கை எப்படி அக்காலத்து மக்களுக்கு உண்டாயிற்றோ, அதுபோலவே, இக்காலக் கொடுமைகள் ஒழிவதற்கும் கொடும்பாவி கட்டி இழுக்க வேண்டுமென்ற நம்பிக்கை அதே பாரம்பரையில் வந்த இக்கால மக்களுக்கும் உண்டாகியிருக்கிறதே என்பதைக்கூட நாம் ஆராய்ந்து பார்க்க விரும்பவில்லை.

ஆனால், யார், லஞ்சத்தை ஒழிப்பதே எமது அரசியல் அகராதியின் முதல்வாக்கியம் என்று கூறினார்களோ, அவர்களுடைய அரசியலில் தான் 'லஞ்சப்பேய்' தனது முழு வடிவத்தையும் காட்டுகிறதென்பதைப்பற்றித்தான் ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

லஞ்சம் ஒழிய வேண்டிய நேரத்தில், லஞ்சத்தை ஒழிக்கவேண்டியவர்களின் ஆட்சியில் ஏன் அது வளர்கிறது? கொடும்பாவி கட்டி இழுத்துக் கொளுத்தும் அளவுக்கு, அதிலும் லஞ்சப் பேயை ஒழிப்பதாக முழக்கமிட்ட காங்கிரஸ்காரர்களாலேயே கொடும்பாவி எரிக்கப்படும் 'விழா' நடைபெறுகிறதென்றால், அதனை நாட்டின் நல்வாழ்வில் அக்கரை கொண்ட யார்தான் ஆராய்ந்து, பாராமல் இருப்பார்கள்!

கொடும்பாவி கட்டி இழுக்கும் முறை, மத அடிப்படையில் ஏற்பட்டதாகும். ஆனால், இப்போது, காங்கிரஸ்காரர்களால் ஆரம்பிக்கப்பட்டு, இழுக்கப்படும் கொடும்பாவி, அரசியல் அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது. முன்னையது, மதக் கொடும்பாவி! பின்னையது அரசியல் கொடும்பாவி!

கொடும்பாவி! லஞ்சப்பேயை ஒழிக்கக் கொடும்பாவி! அந்நியன் ஆட்சியில் இழுக்கப்படாத கொடும்பாவி, நாட்டின் நாயகர்கள் ஆட்சியில் இழுக்கப்படுகிறது! ஏன்?—சிந்தித்துப் பாருங்கள்—தெளிவு பிறக்கும்.

❀

சிறு பொறி, பெருந் தீ!

சிறுபொறி, பெருந்தீயாகி விடுகிறதே- என்று, பெருமூச்சு விடுகிறார், பண்டிதநேரு.

சில்லரைப் பிரச்னைகள் பெரும் சிக்கலில் கொண்டுபோய் விட்டு விடுகின்றனவாம்.

அதன் காரணமாக பிணமும், இரத்தமும், வழிய நேரிடுகிறதாம்!

ஒருசாதாரண ஆள்கூட, சமூகத்தின் அமைதியைக்கெடுத்து, பெருங் கிளர்ச்சியை உண்டுபண்ணிட முடிகிறதாம்.

இதுவா, 'ஜனநாயகம்?'— எனக் கேட்கிறார். 'இதற்குத்தானா, சுதந்திரம் பெற்றோம்?', என்று அங்கலாய்க்கிறார்.

குரலில், சோகம் இருக்கிறதே ஒழிய, விவேகம் இல்லையே என வருந்துகிறோம்.

சிறுபொறி, பெருந்தீயாகிறது!—என்றால், அப்பொறி, எப்படி அவ்வளவு விரைவில் பிடித்துக் கொள்ள முடிகிறது. பச்சைமரச்சோலையில் தீப்பொறி வீழ்ந்தால் உடனே பற்ற முடியாது! உலர்ந்த சருகுகளிருந்தால்தான், சிறுபொறியும் பெருந்தீயாகும்!!

அந்த உண்மையை, அன்பர் நேரு, மறந்து விடுகிறார்.

நாடு பச்சைத் தழைகளின் சின்னமாக இல்லை! பற்றி எரியக்கூடிய சருகுக் கூட்டம் ஏராளம்!! அந்தச் சருகுகள், வறுமை, ஜாதிவெறி, அடக்குமுறை, மூட நம்பிக்கை எனும் பற்பல பெயர்களுடன் இருக்கின்றன நாட்டில். இவையிருக்கும் வரை, சிறுபொறி பெருந்தீயாகத் தான் செய்யும்.

இதை எண்ணி சோகக்குரல் எழுப்புவதற்குப் பதில், அந்தக் குப்பை கூளங்களை அகற்றிட வேண்டும். அதற்கு எங்கே முன்வருகிறது இந்த அரசு? கும்பமேளாவுக்கும் கும்பகோணத்துக்கும் மக்களை விரும்பி அழைக்கிறது! இந்து மதப் பிரசாரத்துக்கு வானொலியை அனுமதிக்கிறது!!—இத்தனை ஊழல்களையும் வைத்துக் கொண்டு, ஓலமிடுவதால் என்ன பயன்?

சிறுபொறியும் உண்டாகாமல் தடுக்க வேண்டும்—அப்படியேற்பட்டாலும், அதுபெருந்தீயாகாத வழியில நாடு அமைக்கப்பட வேண்டும்.

அது, 'ஜே, ஹிந்த்!', என்பதாலா வந்துவிட முடியும்! கனவு, அது!!

"தமிழ்நாட்டின் உண்மை நலனைப் பாதுகாக்க நான் முயற்சிப்பேன். வடக்கத்தியார்களைவிடத் தென்னாட்டினர் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடந்து கொள்ளும் பண்பாடு உடையவர்கள்"

—காமராஜர்

மதுரை 28-8-54

மக்கள் நல ஆட்சி

இருதயராஜ் M.A

6

1000 ரூபாய் கடன் வாங்கியவர் அந்த அளவுக்குட்பட்டு, வேண்டும்போது பாங்கிலிருந்து தேவையான பணத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு அனுமதிக்கப்படுவார். அநேகமாக அவர் ரொக்கமாகப் பணம் எடுக்க வேண்டிய அவசியமே இராது. அவர் யாருக்காவது பணம் தர வேண்டியிருந்தால், பாங்கின்மேல் செக்போட்டுத்தான் கொடுப்பார். அந்தச்செக்கை வாங்கியவர் தன் வரவுசெலவிருக்கும் பாங்கிக்கு அந்தச்செக்கை அனுப்பி தன் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளும்படி செய்வார். அதிர்ஷ்டவசமாய் இருவருக்கும் ஒரே பாங்கில் கணக்கிருந்தால், ஒரு ரூபாய் நாணயம்கூட வெளியே போகாமல், கடன்வாங்கியவர் கணக்கில் அந்தத் தொகையை செலவு எழுதிவிட்டு, மற்றவருடைய கணக்கில் அதை வரவாக எழுதிவிடுவார்கள்.

இந்தமுறையில் பாங்கில் ஒரு 1000ரூபாயை மட்டுமே வைத்துக் கொண்டு, 1000, 1000 ரூபாயாகப் பத்துபேருக்கு கடன் கொடுக்க முடியும் — கடன் வாங்கிய அத்தனைபேரும் அதே சமயத்தில் அவ்வளவு ரூபாயையும் எடுத்துக் கொண்டு போய்விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை பாங்கருக்கு இருப்பதால். ஒருநாளைக்குஒரு 1000 ரூபாய் கடன்காரர் ஏதாவது 100 ரூபாய்க்கு மேல் பாங்கில் வந்து பணம் எடுக்கமாட்டார் என்று பாங்கருக்குத் தெரியும். அப்படியே ஒருவர் 100-க்குமேல் எடுத்தாலும் மற்ற ஒன்பதுபேரில் ஒன்றிரண்டு பேர் ரூ. 100-க்கு குறைவாகவே எடுப்பார்கள் அல்லது ஒன்றுமே எடுக்கமாட்டார்கள் என்ற தைரியம் பாங்கருக்கு உண்டு. கடன்களெல்லாம் (Over Draft) முறையில் கொடுக்கப்படுவதால். கடன்காரர்கள் ஒரு நாளைக்குப் பணம் எடுத்தாலும் அடுத்த நாள் தங்களுக்கு வியாபாரமூலம் வரும் பணத்தை கொண்டுவந்து பாங்கில்தான் போடுவார்கள். ஆதலால் சிலர் எடுத்துக் கொண்டிருக்கும்போது மற்றவர் போட்டுக்கொண்டிருப்பார்கள். அதனால் பாங்கிலிருந்து பணம் போய்க் கொண்டும் அதே சமயம் மற்றவர்களுடைய கணக்கில் பணம்வந்து கொண்டும்தான் இருக்கும்.

அதனால்தான் கொஞ்சபணத்தை வைத்துக்கொண்டே அதைப்போல் 10-மடங்கு 15-மடங்கு பாங்குகள் கடன் கொடுக்க முடிகிறது.

பாங்குகள் நன்றாக நடக்கும் வரையில் யாருக்கும் எந்த பாங்கின் மேலும் சந்தேகமோ, பயமோ தோன்றாதவரையில் பாங்குகளின் வாக்குறுதி நாணயம் ரூபாய் நோட்டு, ரூபாய் நாணயம்போன்றே மதிப்பு பெறும். இதனால் ஒரு நாட்டில் மொத்த நோட்டுகள் நாணயங்கள் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கிறதோ அதைப் போல எட்டு மடங்கோ பத்துமடங்கோ அதற்கு மேலோ பாங்குகள் வாக்குறுதி நாணயத்தை உற்பத்தி செய்கின்றன.

தற்காலத்தில் தொழில், வர்த்தகத் துறையில் உண்டாயிருக்கும் எல்லாவித முன்னேற்றத்துக்கும் பாங்குகளும் ஒரு காரணம்; பாங்குகளின் கடன் வசதிகள் செய்து தரப்படாமலிருந்தால் முன்னேற்றமே தடைப்பட்டிருக்கும் என்பது உண்மை.

ஆனால் பாங்குகளால் கெடுதல்களும் உண்டு. சில சமயங்களில், வியாபாரம் செழித்திருக்கும் நேரத்தில் முதலாளிகள் ஏறினவட்டி தருவதற்கு தயாராயிருப்பார்கள். பாங்குகள் தங்குதடையின்றி கடன் கொடுத்து தங்கள் வாக்குறுதி நாணயத்தை உண்டு பண்ணுவார்கள். நாட்டில் பணப்பெருக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயரும். முதலாளிகளின் லாபம் அதிகரிக்கும். முன்னைவிட அதிகம் கடன் வாங்குவார்கள். பாங்குகளும் தாராளமாக கடன்தருவார்கள். அப்போது வட்டி விகிதங்கள் அதிகரிக்கும். எவ்வளவு அதிக வட்டியானாலும் முதலாளிகள் துணிந்து வாங்குவார்கள். தொழிலாளர் அதிக கூலிக்காக கிளர்ச்சி செய்வார்கள். கூலி அதிகப்படும். இந்த நேரத்தில் அதிகமாக சாமான்கள் உற்பத்தி செய்தால் தேவைக்கு அதிகமாக சாமான்கள் இருக்கும். முதலாளிகளுக்குள் போட்டி வலுக்கும். விலைகள் இறங்கும், இன்னும் இறங்கும் என்று எதிர்பார்த்து மக்களில் பலர் தங்கள் தேவைகளை தற்காலிகமாக குறைத்துக்கொண்டு சாமான்களை குறைத்து வாங்குவார்கள். அப்பொழுது அதிக வட்டிக்கு கடன் வாங்கி அதிக கூலிகொடுத்து கொஞ்சம் சிரமத்துடன் தொழில் நடத்தும் ஒருவர் இருவர் நொடித்துப்போக நேரிடும். அது பார்த்து பாங்கர்களுக்கு பயம் ஏற்பட்டு, கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்பார்கள். தொழில் துறையில் போட்டிருக்கும் பணத்தை திடீரென்று எடுப்பதென்பது அவ்வளவு சுலபமல்ல. வியாபாரத்தை சுருக்கவேண்டிவரும். நல்ல நிலைமையிலிருப்பவர்கூட கடனைத் திருப்பிக்கொடுக்க சக்தியின்றி கடனாளியாவார்கள். தொழிற்சாலைகள் மூடப்படும். தொழிலாளர் வேலையினின்று நீக்கப்படுவார்கள் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும். மக்கள் கையில் பணப் புழக்கம் குறையும். விலைகள் இன்னும்இறங்கும், பாங்கு

வார் குறைவதனால். இன்னும் சில முதலாளிகள் நஷ்டமடைந்து தொழில் துறையில் சுணக்கம் ஏற்படும்.

இந்தச்சுணக்கம் பலகஷ்டங்களை உண்டுபண்ணும். தொழிலாளருக்குக் கூலி படிப்படியாகக்குறையும். பெரும்பான்மையோரிடமும் கையில் பணப்பழக்கம் குறையும். மேலும் விலைவாசிகள் இறங்கும்—உற்பத்தி இன்னும் குறையும். தொழிற்சாலைகள் மேலும் மூடப்படும். எங்கும் மந்தநிலை பரவும்.

மூலப்பொருள்கள், கச்சாப் பொருள்கள், யந்திர சாதனங்கள் எல்லாம் மலிவானநிலை. தொழிலாளர் கூலி குறைந்தநிலை. இதனால் சில வருஷங்கள் நீடித்த மந்தகாலத்திலும் உறுதியாக நிலைத்து உயிரோடு இருக்க முடிந்த ஒரு சில தொழில்முதலாளிகள் இப்பொழுது உற்பத்திச் செலவுகள் குறையக் குறைய தங்கள் லாபம் திரும்பவும் தோன்றக் காண்பார்கள். எங்கும் உற்பத்தி குறைந்ததனால், சாமான்களுக்கு கிராக்கி ஏற்பட்டு விலைகள் சற்று உயரும். அவர்கள் தங்கள் தொழிலைச்சிறிதுவிரிவாக்குவார்கள். லாபம் இன்னும் அதிகரிக்கும்.

மந்த காலத்தில் அதிகம் அடிபடாமல்ஜாக்கிரதையாகப்பணத்தை சேமித்து வைத்திருந்த சில முதலாளிகள் இப்பொழுது திரும்பவும் தொழிலிலீடுபடுவார்கள். உற்பத்திசெலவு குறைவாகவே இருக்கும். அதிகக் கூலிகேட்டால் வேலையைவிட்டு தள்ளிவிடுவார்கள் என்று எண்ணிதொழிலாளர் பயந்து நடப்பார்கள். இந்தசயத்தில் தொழில் நடத்துபவர்களெல்லாம் நன்றாகச் சம்பாதிப்பார்கள். ஆனால் இது கொஞ்சநாளைக்குத்தான். எந்தெந்தத் தொழில் அதிக லாபமிருக்கிறதோ அதிலெல்லாம் இப்பொழுது தைரியமாக சிலர் வந்து சேருவார்கள். புதியஆலைகள்நிறுவப்படும். புதிய இயந்திரங்கள் தேவைப்படும். இவைகளுக்கெல்லாம் தொழிலாளர் தேவைப்படுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தொழிலாளர்களுக்கு கிராக்கி ஏற்படும். தொழில் செழிப்புறத் தொடங்கும். பாங்கர்கள் திரும்பவும் கடன்தர முன்வருவார்கள். இதிலிருந்து வியாபார செழிப்பு படிப்படியாக உச்சநிலை அடையும்—கூலியும் உயரும், லாபம் உயரும். ஆனால் அந்த செழிப்பு அதிக நாளைக்கு நீடிக்காது; அந்த உச்ச நிலையிலிருந்து திடீரென்று சரிவு ஏற்பட்டுப் பிறகு மந்தம் ஏற்படும்.

வியாபாரச் செழிப்பும் மந்தமும் மாறிமாறி ஏற்பட்டுக்கொண்டிருப்பதைத் தவிர்க்கமுடியாது போட்டிப் பொருளாதார முதலாளித்துவ சுதந்தர அமைப்பில்.

ஆகவே முதலாளித்துவ அமைப்பில் முக்கியமான அம்சம் சொந்த சொத்துரிமையும் பாரம்பரை சொத்துபாத்தியதையும்.ஒவ்வொருவருக்கும் சொத்து சேர்க்கும் உரிமை, அதை ஆண்டு அனுபவித்து, தனக்குப்பின்மற்றவருக்கு வாரிசாக விட்டுச் செல்வதற்கும் உரிமை. இதன் விளைவாக நாட்டின் செல்வம் எல்லோரிடையேயும் சமமாகத்தங்கியிராமல், பயங்கரமான ஏற்றத்தாழ்வுகளும், ஏற்பட வசதியும், பணக்காரர்கள் மேலும்பணக்காரர்களாகவும், ஏழைகள் இன்னும் அதிக ஏழைகளாவதற்கும்வழி இருக்கிறது.

உற்பத்தி சாதனங்களாகிய நிலம், தொழிற்சாலைகள் எல்லாம் தனிப்பட்டவர்கையில் இருப்பதால் அவர்கள் தங்கள் சொந்த நலனுக்காக அவைகளைஉபயோகிக்கவும், பொது நலனைமறந்துவிடவும்,ஏதுவாகிறது. அதனால் நாட்டில் உற்பத்தியாகும் செல்வத்தில் பெரும்பகுதி ஒருசிறு கூட்டத்தினரிடம்போய்ச் சேரவும், பாமரமக்கள் உழைத்து, தங்கள் உழைப்புக்கு தக்க ஊதியமின்றி வாடவும் நேரிடுகிறது.

இதனால் சொத்து இருப்பவர்களுக்கும் இல்லாதவருக்குமிடையே ஒரு பெரும் பள்ளம். உத்தரவு கொடுக்கும் ஒருசிறியகூட்டம், உத்தரவை நிறைவேற்றிவைக்க உழைக்கும் ஒரு பெரியகூட்டம். இந்தஇரு கூட்டத்தினரிடையேயுள்ள பள்ளம் விரிய விரிய வர்க்கப்போர்! தொழிலாளி முதலாளி தகராறு, தடுக்க முடியாத அளவுக்கு வளரும்.

முதலாளித்துவ முறையில்பொருளாதார சுதந்தரம் என்றால் தன் சொத்தையும் செல்வத்தையும் ஒருவன் எப்படியாகிலும் உபயோகிக்க சுதந்தரம், விரும்பிய இடத்தில், தொழிலில் வேலைசெய்ய சுதந்தரம், யாருடனாகிலும் வியாபாரத் துறையிலோ, மற்றத்துறையிலோ ஒப்பந்தம் செய்துகொள்ளச் சுதந்தரம்.

சொத்தை எல்லாம் ஒருவன் குடித்து அழிக்கவோ அல்லது வீணான வேடிக்கைகளில் வீண்விரயம் செய்யவோ முதலாளித்துவப் பொருளாதாரம் அனுமதிக்கிறது. யாரும், அரசாங்கம் கூட காரணம் கேட்க முடியாது.

இந்த முறையில் அவனவன் இஷ்டப்பட்ட இடத்தில் வேலைக்கமரலாம். அதற்கு சுதந்தரமிருக்கிறது என்று சொல்வது ஏட்டளவுதான். உண்மையில் விரும்பிய வேலை கிடைப்பது குதிரைக்கொம்புதான். சிபார்சு உள்ளவர்கள், செல்வாக்குடையவர்கள் இவர்களுக்குத்தான் வேண்டியவேலை கிடைக்குமேதவிர, மற்றவர்களுக்குக் கிடைப்பது அவ்வளவு சுலபமல்ல. படித்தவர், பணக்காரர் இவர்கள் விரும்பாத உடலுழைப்பு தேவையான குறைந்த கூலியுள்ள வேலைகள் வேண்டுமானால் ஏழை எளியவர்களுக்கு விரும்பிய போது கிடைக்கும்.

மேலும் இந்த முறையில் தனித்தனி முதலாளிகள் தங்களிஷ்டம் போல் தமக்குப்பிரியமான சாமான்களைத் தயாரிப்பதும்,நாட்டில் எவ்வளவு உற்பத்திதேவை என்று கணக்கிட்டு அதற்குத்தக்க ஒவ்வொருவரும் தனியாக எவ்வளவு உற்பத்தி செய்வதென்றும் ஏற்படுத்திக் கொள்ளாமலும்இருப்பதால்பெருங் கேடுகள் விளைகின்றன. நாட்டிலே நெல்லுக்குப் பஞ்சம் இருக்கும் போது நல்ல நிலங்களிலே எல்லாம் பருத்தி, இன்னும் மற்ற பொருள்களை உற்பத்தி செய்வதும், உணவுப் பஞ்சம் இருக்கும்போதே ஆடம்பர சாமான்களின் உற்பத்தியைப் பெருக்குவதும் சர்வசாதாரணமாய்க் காணலாம்.

முதல்போட்டு பெருந்தொழில் நடத்தும் முதலாளிகள் பொருளாதாரத்துறையில் தாங்கள் பெறுகின்ற ஆதிக்கத்தை, அரசியலிலும் தங்களுக்குச் செல்வாக்கு அடைய உபயோகித்துக்கொண்டு தங்களுக்குச்சாதகமாகச்சட்டங்கள் இயற்றிக் கொள்வதையும் காணலாம்.

(இன்னும்-வரும்)

அவன் ஓர் 'மனிதன்!'

[அரங்கண்ணல்]

என்னருமை நாட்டோரே!

நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். இதயத்தைக் காட்டி, என்னாலான பணியைச் செய்த நான், விடைபெற்றுக்கொள்ளுகிறேன். இன்றுவரை, அடிமைபோல் கிடந்தேன்; ஆனால், அந்த அடிமை வாழ்விலும், எனக்கோர் ஆனந்தம் இருந்தது. சொந்தச்சுகங்களைத்துறந்தாலும் மனைவி மக்களை மறந்தாலும், இரவும் பகலும் விழித்து வேலைசெய்தாலும், சொல்லமுடியாத சுகம் கண்டேன்—என் வேலையில். மக்களுக்காகப் பாடுபடுகிறோம் என்கிற பேரானந்தம்தான், அது. இந்த நிமிடம் வரையில், என் உயிர்மட்டுமல்ல, உடலும், உங்களுடைய ஏவற்பொருளாக இருந்தது. இனி, நான் அடிமையல்ல! நான், சுதந்திர மனிதனாகிவிட்டேன்!! அமைதியான, இந்த அறையில் உட்கார்ந்தபடி யோசிக்கிறேன். என்னைப் பேட்டி கண்ட பிரமுகர்கள், ஏராளம்; வாழ்த்தவந்த அறிஞர்கள் பலருண்டு; கர்ஜனையும் எழுப்பியிருக்கிறேன்; களிப்பும் அடைந்திருக்கிறேன். ஆனால் இப்போது! இந்த அறையில், நான் படித்து மகிழ்ந்த நூல்களும், பார்த்துப் புரட்டிய 'பைல்'களும் ஏராளமிருக்கின்றன. இனி.........! அவைகளை, நான் தொட்டுப்பார்க்க முடியாது. பட்டுப்போன மரமாகிவிடுவேன்! என் மூளையைக் குழப்பிய, பிரச்னைகள் ஏராளம் உண்டு. இனி, எனக்கு, அந்த நிலை இல்லை! அமைதி நிலவுகிறது, இந்த அறையில். சுதந்திரத்துக்காக உயிரிழந்த வீரர்கள் பலரின் படங்கள் இருக்கின்றன. அந்தப் படங்களை, ஆனந்தத்தோடு பார்க்கிறேன். என்மனதில் மோதிடும் எண்ணங்களை இனி, யாரிடம் கூறப்போகிறேன்? என்னைச் சுற்றி ஏராளமான நண்பர்கள் இருக்கிறார்கள்—அவர்களனைவரும், வாழ்விலும் தாழ்விலும், என்னோடிருப்பதாக எத்தனையோ முறை கூறியவர்கள்தான். அவர்களிடம் கூட, பேச விரும்பவில்லை, நான். இப்போது அவர்கள் நண்பர்களாக இல்லை! அரசியல் குட்டையில் அகப்பட்டதைச் சுருட்டும் நரிகளாகிவிட்டார்கள்!! எனவேதான், இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இந்த எழுத்துக்களே, நீங்கள் காணப்போகும், கடைசி எழுத்துக்கள். இதை எழுதும்போது, கண்ணீர் சிந்தியிருப்பான்!—என்று, நினைப்பீர்கள் அல்ல, அல்ல. களிப்புக்கலந்த மனோநிம்மதியுடன், ஒரு உழைப்பாளிக்கு இதுதான் கதி என்கிற அமைதியோடு, எழுதுகிறேன். மக்களுக்கு, அடிமையாக இருந்து பாடுபட்ட நான் போகிறேன் — திடமான, எச்சரிக்கையோடு! விரோதிகளே—என் வீழ்ச்சி, உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால், என் மக்கள் இனி யாருக்கும் அடிமையாக இருக்கமாட்டார்கள்—அவர்கள், விழித்துக்கொண்டு விட்டார்கள்! என் வாழ்க்கையைத் தந்தேன்—உங்களுக்கு. என் சாவையும் தருகிறேன், காணிக்கையாக. சாகிறேன், நான்! ஆனால் சரிதத்தில் அடியெடுத்துவைக்கிறேன்!'''

*

இதோ, பிணம்! அருகே இக்கடிதம்!! இருபத்தைந்து ஆண்டுகள், அந்த நாட்டுக்கு உழைத்த, ஓர் தலைவன் அவன். களைத்துப்போன பருவம். வயது, 71- சுட்டுக்கொண்டு மாண்டான். காதல்ஏமாற்றமோ, குடும்பத்தகராறோ, அல்ல; தற்கொலைக்குக் காரணம்- பொதுவாழ்வு! அரசியல் அலைகள்!! அந்த நாட்டு மண்ணிலே அவன் மாவீரனெனப் பவனிவந்தவன்—வாழ்த்தாத வாயில்லை! புகழாதஏடில்லை! போற்றாததோழர்கள் கிடையாது!! 1951ல் யார் அந்த நாட்டின் தலைவனாக வருவது என்கிற, தேர்தல் நடைபெற்றபோது, மக்கள் அவனையே தெரிந்தெடுத்தனர்—பதவியைவிட்டு விலக இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன—எனினும், சாவோலை தந்துவிட்டு, தன்னுடைய அறையில் பிணமாகிவிட்டான்!! பிணமாகவேண்டிய பிரச்னை அல்ல, அவனை எதிர்நோக்கி இருந்தது. அரசியல் வாழ்வில், அன்றாடம் காணக்கூடிய காட்சிதான். அவனுடைய தலைமையை எதிர்த்து, சிலர் கிளர்ச்சிசெய்தனர்—ராஜினாமாச்செய்யவேண்டும் என்றனர்—ராஜினாமா செய்யவிரும்பாவிட்டால் மூன்றுமாதகாலமாவது வெளியூருக்குப்போய்விட்டு வரட்டும் என்றனர். அந்தச் சொல்லைத் தாங்கமுடியாது, பிணமாகியிருக்கிறான்! அரசியல் பீடத்திலிருந்து உருட்டித் தள்ளப்படுவோர், இந்த ஜனநாயகயுகத்தில், பலருண்டு. பிரகாசமும், ஓமந்தூராரும், ஆச்சாரியாரும், ஏதோ காரணங்களால், ஆட்சிநடத்தவேண்டிய காலமிருந்தும், இடையிலேயே தள்ளப்பட்டார்கள். அதுபோலத்தான், இதுவும். ஆனால், இவன், தன்தோழர்களே இச்செயலுக்கு 'தாம்பூலம்' தந்தவர்கள் என அறிந்ததும் துண்டுக் காகிதத்தில் கடைசிஎழுத்துக்களைப் பதித்துவிட்டு, துப்பாக்கிக் குண்டுக்குத் தன்னைத் தத்தம் செய்துவிட்டான். கோழை!—என்பர், அவன் செயலை. ஆனால், அவன் கோழையல்ல! பணக்காரர்களும், முதலாளிகளும் ஒன்றுகூடிஎதிர்த்தபோது, பயப்படாது நின்றதீரன். ஆலையில் பாடுபடுபவனுக்கு நியாயமான கூலியைக் கொடு! மின்சாரம், தனிப்பட்டவன் சொத்தாயிருக்கக்கூடாது—அரசாங்க உடைமையாக்கு. கொள்ளைலாபம் அடிக்கிறார்களா—போடு, வரி!—என்று, சட்டங்கள் போட்டவன். அதனை நிலைநாட்டவும், தயங்காதவன். அத்தகையவனைக் கோழையென்று எப்படிக்கூறமுடியும்? விரும்பியிருந்தால், மாளிகைவாசிகளின் கைலாகு பெற்று, மக்களைப் பார்க்கும்

போது, ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமிருக்கக்கூடாது என்று கூறிவிட்டு, பணக்காரனைப் பார்க்கும்போது பல்லிளிக்கும் 'பண்டிதநேரு' ஆயிருக்கலாம். அவன், அப்படிச் செய்யவில்லை! திடமான முடிவுடன் இருந்தான்—நாட்டு மக்களின் துயர்களைவதே தன் திட்டம் என்றான். ஊருக்கு உபதேசித்துவிட்டு, மக்கள் 'ஜே!' முழக்கத்தை வியாபாரப்பொருளாக ஆக்கவிரும்பவில்லை. வயது, 71. வாழ்க்கையின் அந்திப் பருவம்! நமக்கென்ன!—என்றில்லை பாடு, பட்டான்! பெற்ற பலன், துரோகம்!! எனவே, பிணமாகியிருக்கிறான்.

*

வானவில்லுக்கு ஒரேஒரு வர்ணம் தான்!—என்று, ஓவியன் தீட்டிவிடுவதில்லை. அதைப்போலத்தான், அரசியல் வாழ்வும் ஒரே நிலைமையிலிருக்குமென்று கூறிவிடமுடியாது. ஆறிடுமேடும் மடுவும் போலாம்—அரசியல் வாழ்வு! ஒருசமயம், போகபூமியாகஇருக்கலாம்; மற்றோர்நேரம் புகையும் எரிமலையாகக்காட்சிதரும். இரண்டுக்குமிடையே, தான் கொண்ட கொள்கைகளை விதைத்து அதன் அறுவடையைக் காணும் தலைவர்கள் கொஞ்சம். வெற்றிபெற்றோம்—என்று முரசு கொட்டிடும், வீரனை சிறுபொறி, சிதைத்து உருமாறிடச் செய்யும். அலைகடல் தாண்டிவிட்டோம்—அதோ, கரை! என்று உவகைக்கூத்தாடுபவனை, உயரமான இடத்திலிருந்து அதலபாதாளத்தில் உருட்டிவிடும். அதிலும் மந்தைச் சுபாவம் படைத்த மக்கள் வாழும் நாட்டில், இப்படி நடப்பது, சகஜமான சம்பவம். இதனை, அந்நாள் ரோமாபுரியினைப்பற்றி எழுதும், ஷேக்ஸ்பியர், அழகாகச் சொல்லுகிறான்—சீசர் இறந்தபோது, மகிழ்ந்தனர் மக்கள்! சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுடைய புகழை எடுத்து அண்டனியென்பான் சொன்னதும் அழுகின்றனர்!—எனும், சம்பவம் மூலம். இத்தகைய மக்கள் மன்றத்தில், அரசியல்வாழ்வும்தாழ்வும், சகஜமாகும். அதனால்தான், ஜனநாயக நாடுகளில் வெற்றிக்குப்பதில் தோல்விகிடைத்தாலும் துவளுவதில்லை, அரசியல் தலைவர்கள்! ஆனால், நமது கிழவன், தோல்வியைக்கூடத் தொடவில்லை—கொஞ்சநாளைக்கு ஓய்வெடுத்துக் கொள்—என்று சொன்னார்கள். அதனைத் தாங்கமுடியாது, தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருக்கிறான். உலகின் முதல் சம்பவம் இது!

விஷத்தை ஏந்தி மாண்டான், சாக்ரடீஸ்—சிலுவைக்குயிரைத் தந்தார் இயேசு—உயிரோடு கொளுத்தப்பட்டனர் லாட்டிமர் ரிட்லி—என்று, வரலாறு, கூறுகிறது. அந்த மாவீரர்களுக்கு, மரணம், எதிரிகள் தந்தது! இவனுக்கோ, எதிரிகள், மரணத்தைத் தரவில்லை—இவனே, அதனை எதிர்கொண்டழைத்துத் தழுவிக்கொண்டிருக்கிறான்!! உலகில் கொலைகள் சகஜம்—அரசியல் வாழ்வில், கொலைசெய்யப்படுதல் அடிக்கடி நடைபெறுவதுண்டு. ஆனால், நமது கிழவனுக்குக்கிடைத்தது, கொலையல்ல! தற்கொலை!! தரித்திரம், தலைவிரித்தாடும் நாட்டில், தற்கொலைகள் கூடச் சகஜம் தான். மாற்றானுடன் மனைவி குலாவுவதைக் காண்போனும், உற்றாரால் உதாசினம் செய்யப்பட்டோனும், வறுமைத் தேளின் கடியைச் சகிக்க முடியாதவனும், வாட்டிடும்நோயின் கொடுமையைத் தாங்க முடியாதவனும், முழுக்கயிற்றையோ, துளி விஷத்தையோ, மரக் கிளையையோ தேடிச் செல்லுகிறான், தொங்குவதற்கு! இது, எதுவும் இல்லாதவன் நமது கிழவன். எனினும் தற்கொலை செய்துகொண்டிருக்கிறான்! அதற்கு முன் தீட்டிய கடைசி எழுத்துக்கள் மூலம், தெரிவிக்கிறான்—

"I was a slave to the people and now I liberate myself into eternal life. But the people will no longer be slave to any one. I gave, you my life and now offer you my death. I now leave life and enter history"

நான், சாகிறேன்! சரித்திரத்தில் இடம் பெறுகிறேன்!!—எவ்வளவு தெளிவான வாசகங்கள். தன்னுடைய தற்கொலை மூலம், சரித ஏட்டில் தனக்கோர் இடமுண்டு என்ற திடமான நம்பிக்கையோடு, செத்திருக்கிறான். "நான் சாகிறேன்! அதன் மூலம் என் மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்!! அவர்கள் இனி யாருக்கும் அடிமையாயிருக்க மாட்டார்கள். ஏனெனில், அவர்களுக்காகப் பாடுபட்ட நான் சாகிறேன். நான், சாவது, ஏன்?—என்பதை அவர்கள் அறிந்தால், நிச்சயம், தலைகுனியமாட்டார்கள்" என்று தீர்மானமாகத் தெரிவிக்கிறான்! தன்னுடைய சாவு, மக்கள் மனதில் ஒரு ஆவேசத்தை உண்டுபண்ணும்—அப்போது. உண்மையை உணர்வார்கள் மக்கள்—அந்த நேரத்தில் தன்னுடைய அரும்பணியின் பெருமையினை உணர்வார்கள்!—என்று, உறுதியாக நம்பி, உயிரைவிட்டிருக்கிறான், அத்தலைவன். என்னே, உயரிய பண்பு! என்னே, தியாகம்!!—என்று, அவனைப்பற்றி ஆயாசப்படுகிறது நமது இதயம். மக்கள் யாருக்கும் தலைவணங்கார்களாம்! அந்த உணர்ச்சியை அவனுடைய சாவுதருமாம்!!

அவன், சாகக் காரணம் என்ன? தோழர்கள், அவன் விலகவேண்டுமென்று, செய்த கிளர்ச்சி! அந்தக் கிளர்ச்சியைக் கடைசிவரை நடத்தி, அவனை வீழ்த்த முனைந்தனரா? அதுவும் இல்லை! அவனிடம்போனார்கள் தெரிவித்தார்கள்.

"ஐயா! இந்நாட்டின் தலைவராக இருப்பதை நாங்கள் விரும்பவில்லை"

"நீங்கள் யார்?"

"நாட்டின் மக்கள்!"

"அப்படிச் சொல்ல, அருகதையில்லை, உங்களுக்கு — பீரங்கியும், விமானப்படையும் வைத்திருக்கும் ராணுவத்தினரில், சிலர் நீங்கள்"

திருமணம்

23-8-54 திங்களன்று தஞ்சை கரந்தையில் பி. மகாலிங்கம்—எம். ஜானகி ஆகியவர்கட்குபதிவுத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி கரந்தைப் புலவர் கல்லூரி உபதலைவர், புலவர் ந. ராமநாதன் அவர்கள் தலைமையில் தஞ்சை எஸ். எஸ். மணி கரந்தை—கணேசன், டி. பி. துரையரசர் முதலியோர் பேசினார்.

"ஆமாம்! நீங்கள் விலகாவிடில், நாங்கள், ஒத்துழைக்கமாட்டோம்"

"நான், ஏன் விலகவேண்டும்?"

"உங்கள் ஆட்சியை எதிர்த்தான் என்பதற்காக, ஒரு பத்திரிகாசிரியனைக் கொல்ல முயற்சித்தீர்கள்?"

"நானா......"

"நாடு, பேசுகிறது, அப்படி"

"நீங்களேகூட அப்படிப் பரப்பலாம், செய்தியை. கொலை நடந்திருந்தால், விசாரணை நடக்கட்டும். எதையோ ஒன்றைக் காரணம் காட்டி என்னை நீக்கிடச்செய்யும் சதிக்கு இரையாகமாட்டேன். நாட்டிற்கு தலைவன், நான்! சாவைத் தவிர வேறெந்த சக்தியாலும் என்னை நீக்கமுடியாது!"

'அப்படியென்றால்......"

"நான், விலக முடியாது!"

"அதுதான், முடிவா?"

"வேறு, முடிவில்லை!"

"நாங்கள், தங்கள் தலைமையைப் பறிக்கும் உத்தேசத்துடன் வரவில்லை. நாட்டின் நலனுக்காகச் சொன்னோம்"

"நாட்டின் நலனுக்காகத்தான் நானும் வாழ்கிறேன்!"

"கொஞ்சம் கோபிக்காமல் கேட்க வேண்டும்—தாங்கள், தலைமைப் பதவியைவிட்டு விலகாமலும்; அதே நேரத்தில் அரசியல் எதிரிகளுக்கு இடம் கொடாத வகையிலும் மாற்று யோசனையொன்று சொல்கிறோம்"

',என்ன?"

"90 நாட்கள்—மூன்று மாதம்—எங்காவது வெளிநாட்டுக்குச் சென்றுவாருங்கள், தங்களுக்கும் ஓய்வு கிடைத்ததுபோல இருக்கும்! நாட்டின் நிலைமையும் சரியாகி விடும்!"

"யோசிக்கிறேன்!"

*

யோசித்தான்! விளைவுதான், தற்கொலை! பிரேசில், தென் அமெரிக்காவிலேயுள்ள, வளங்கொழிக்கும் பிரதேசம். குடியாட்சி அமைப்புக் கொண்ட அந்நாட்டின் தலைவன்தான், வர்காஸ் எனும், கிழவன்! அரசியல் காரணமாகப் பல அல்லல்களை அனுபவித்தவன்—இடையில் ஓர் சமயம் நாட்டை வளைத்துவிடக்கூடிய அளவுக்கு வளர்ந்து, ஆட்சியாளரால் வெளியேற்றப்பட்டவன். அவன் மீண்டும் 1951ல் குடியாட்சிக்குத்தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்! தன்னுடைய ஆட்சிக் காலத்தில், ஏழை மக்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்யவேண்டும் எனும் நோக்குடன் சில பல திட்டங்களை நிறைவேற்றினான். அவைதான் அமிதலாப வரி! தொழிலாளர் கூலி நிர்ணயம்! மின்சாரத் தேசிய உடைமை!— முதலியவை. இந்தப் போக்கு, பீதியைத்தந்து, பண முதலைகளுக்கு. விளைவு அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவரை நாடினர்! வெள்ளை மாளிகை, திட்டம் தீட்டிற்று—விரோதிகள் முளைத்தார்கள் வர்காஸுக்கு எதிராக. நண்பர்களே, வஞ்சகர்களாயினர்!

இந்நிலையில், வர்காஸ் ஆட்சியை எதிர்த்து எழுதிக்கொண்டிருந்த ரியோடிஜெனீரோ பத்திரிகாசிரியன் ஒருவனைக்கொல்ல, யாரோ முயற்சித்தார்கள்! அந்த முயற்சி, தவறி, விமானப்படையைச் சேர்ந்த ஒரு அதிகாரிமீது குண்டடிபட்டது! சம்பவத்துக்கும், வர்காசுக்குமிடையிலே முடிச்சுப் போடப்பட்டது! தலைவனின் தூண்டுதலே, காரணம்' என்றனர், விரோதிகள். விமானப் படையினர், சீறினர்! திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதியென்றனர், விரோதிகள். விமானப்படை, 'வர்காசே போ!' என்றுமுழக்கமிட்டது. கடற்படையும் கர்ஜித்தது, ராணுவ அணிவகுப்பைப் பார்வையிடவருவதாக இருந்த தங்கள் ஜனாதிபதியாம் வர்காசுக்கு அணிவகுப்பு மரியாதை தரமுடியாதென மறுத்தனர், அவர்கள். ராணுவ மந்திரி, திகைத்தார்! படையினர், 'வர்காஸ் விலகவேண்டும்', என்கிற நிபந்தனையைத் தந்தனர்! வர்காசிடம். மறுத்தான், கடைசியில் குறைந்தது மூன்றுமாதகாலமாவது வெளியில் சென்றிருந்துவிட்டு வாருங்கள், என்று கூறப்பட்டது. யோசிக்கிறேன்!—என்றார், வர்காஸ்.

"என்னைக் கண்டபோது, எத்தனையோ முறை அணிவகுத்து மரியாதைசெய்த ராணுவப்படையினர், இன்று நான் விலகவேண்டும் என்ற நிபந்தனையை நீட்டுகின்றனர்"

"நீட்டினால், என்ன! தரைப்படை உன் கையில்தானே இருக்கிறது—தாக்கு! பிடி! அடை! பிரளயமா வந்துவிடும்"

"நாட்டின் அமைதி கெடும்"

"உன் அமைதி கெட்டுப்போய் விட்டதே"

"நான் தனி மனிதன்"

"........ஆனால் தலைவன்! நாட்டு மக்களுக்கு உழைத்தவன்!!"

"அதனால்தான், யோசிக்கிறேன்! ராணுவத்தினர் நீட்டும் நிபந்தனையை ஏற்று மூன்றுமாத காலம் வெளிநாடு சென்று வந்துவிட்டால் மட்டும் இப்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை சரியாகிவிடுமா? ஆகாது! ஆகாது!! எனது படையினரிடம், விரோதிகள் தந்திருக்கும், விஷம்—சாமான்யமானதல்ல, அதனால்தான் யோசிக்கிறேன். நான் பதவியில் இருக்கக்கூடாதாமே! இந்த நாட்டு மக்களுக்காக உழைத்து உலர்ந்த நான், இருக்கக்கூடாதாம். பதவியைவிட்டுவிலகி, யார் எக்கேடு கெட்டால் என்ன, என்று போய் விடலாம்! என் மனம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. இவர்களுடைய நிபந்தனைக்குப் பணிந்துவிட்டால், விரோதிகள் வெற்றிபெற்றதாகக் கருதுவர்! ஆட்டிப்படைக்கும் அமெரிக்கா ஆர்ப்பரிக்கும்! நம்பிக்கிடக்கும் மக்களும், என்னை சந்தேகித்தாலும் சந்தேகிப்பர். அதோ நான் முடிதுறப்பதாலே,

[12ம் பக்கம் பார்க்க]

"தமிழ்நாட்டினருக்குப் புகழ் கொண்டுசேர்த்தக்க வகையில் நான் நடந்து கொள்வேன். தமிழர்களின் கௌரவத்தைக் குறைக்கும் காரியம் எதையும் செய்யமாட்டேன். இதற்கு மாறாக ஏதாவது இருந்தால் நான் பதவியை விட்டுவிடுவேன்"

—காமராஜர்

மதுரை 27-8-57

திராவிடநாடு

காஞ்சி] 5—9—54 [ஞாயிற

காற்றுக் கோழிகள்!

காற்றினிலே கலந்துவிடவில்லை அந்த முழக்கம்! கருத்திலே அலை மோதிக் கொண்டுதான் இருக்கும்!! உரையாடலின்போது அல்ல, உள்ளே மக்கள் திரண்டிருந்த மண்டபத்தில், உரத்த குரலெடுத்து உற்சாகமாகப் பேசினார்கள். "வீராதிவீரர், இவர்! வெற்றிமாலை சூட்டினர்." "லால்குடியே இவருக்கு ஆதரவு தந்தது. கதர் அணிந்து காங்கிரசிலிருந்த இவரே, காங்கிரசை எதிர்த்துத் தோற்கடித்தார்," இவ்வண்ணம் மக்கள் மன்றம், அவர்களைப் பார்த்து வியந்தது! அவர்களோ, அந்த மக்கள் மன்றத்தைப்பார்த்து உரத்த குரலில் சொன்னார்கள்—

"திராவிடநாடு அமைந்து மக்கள் சரிசமமாக வாழவேண்டுமென்பதை நாங்கள் விரும்புகிறோம். ஐக்கிய ஜனநாயக சர்க்கார் அமைய நாங்கள் ஒத்துழைப்போம். தி. மு. கவும் அண்ணாதுரையும் பாராட்டுவதோடு இருந்துவிடக்கூடாது — இதற்கான வழிகளை அடிக்கடி எடுத்துக் கூற வேண்டும்"

இப்படிப் பேசியவர்தான், இப்போது, விழித்துப் பார்க்கிறார், நம்மை! 4-3-52 அன்று, தி. மு. க. ஆதரவு பெற்று வெற்றி பெற்ற எம். எல். ஏ-க்களை வாழ்த்த சென்னை செயிண்ட்ஸ்மேரி மண்டபத்திலே, வெள்ளம்போல் திரண்டிருந்தனர், மக்கள். அவர்கள் மத்தியிலே, இவ்வண்ணம், வீரமுழக்கமிட்டார் நண்பர் எஸ். எஸ். ராமசாமி! அவர், கனம் ஆகாதிருந்த நேரம்—கருத்திலும் ஊனம் ஏற்படாத வேளை. அதுபோது, உற்சாகமாச் சொன்னார், திராவிட நாடு அமையத்தீரர்கள் நாங்களிருக்கிறோமென்று! அந்தத்தீரம், இவ்வளவு விரைவில் உலர்ந்திடுமென்று, அதுபோது யாரும் எண்ணவில்லை. ஆனால், இப்போது! முறைத்துப்பார்க்கிறார்-விழியைப் பெரிதாக்குகிறார்—வேதனையையும் தருகிறார்.

அரும்பாடுபட்டு அவரது மக்கள் அமைத்த உழைப்பாளர் கட்சியினை ஊராளும் கட்சிக்கு அடிபணிய வைத்துவிட்டார்! தேர்தலின்போது, கோழிப் பெட்டியின் பெருமை குறித்து, நாம் பேசிய இடங்கள் பல—அந்தப் பெருமையை அயலாரிடம் அடகுவைத்துவிட்டார், எஸ். எஸ். ஆர்!! அதற்கு, பெற்ற பரிசு, 'கனம்!' இழந்ததோ, ஏராளம்! அந்தக் கோழிப்பெட்டியின் பெருமையால்தான் அரசியல் உலகில் யாருமறியாத நிலையிலிருந்த அவரும் நண்பர்கள் பலரும், உழைப்பாளரின் குரலை உயர்த்திக் காட்ட முடிந்தது! இன்றோ, அக்குரல், 'விருதுநகருக்கு' இரையாகி விட்டது! வீணாகிவிட்டது!! இந்திய உபகண்டத்தையே, கலங்கச்செய்த தென்னாற்காடு, படை வீடுகளின் முகாம் என்று மாற்றார் மருண்ட மாவீரர் கோட்டம், ஏழை எரிமலை உருவாகிறது என்று எத்தர்கள் அஞ்சிய மாவட்டம், இன்று வீழ்ந்துவிட்டது! வெள்ளாடு ஆகிவிட்டது!! வீழ்ச்சியின், விளைவு, இப்போது—தெரியாது. ஏனெனில், கண்ணை மறைத்திருப்பது, 'கனம்' எனும் கண்ணாடி! அது கழற்றப்பட்டபின் வெளிச்சம் தெரியும்—விளக்கமும் ஏற்படும்!! எஸ் எஸ். ஆர். இவ்வண்ணம், முழக்கமிட்டு, மக்கள் மன்றத்தின் முன் உறுதிமொழிதந்தார்—அதைவிடத் தீவிரமாகப் பேசினார், திருச்சி மாவட்டத் தலைவர் ராஜா சிதம்பரம்.

"திராவிட நாடு வெகு விரைவில் கிடைத்துவிடுமென நம்புகிறேன். அதற்கான வழியும் சுலபமாகி வருகிறது. அது இன்னும் சுலபமாக வேண்டுமானால், காங்கிரசல்லாத ஆட்சி இங்கே ஏற்படவேண்டும். அப்படியேற்பட்டால் நிச்சயம் மத்திய சர்க்காருக்கும் நமக்குமுள்ள உறவு முறியத்தான் செய்யும்"

கூறியவர், ராஜாசிதம்பரம்! அப்போது வெளிவந்த நமது ஏட்டைப் புரட்டினால், கிடைக்கும்!! காங்கிரசல்லாத ஆட்சி இங்கே ஏற்பட வேண்டும்—என்றார். இன்று, அவர், காங்கிரசுடன் கைகோர்த்துக் கொண்டிருக்கிறாராம்! மாவட்டத் தேர்தலில் வெற்றிபெற 'அந்த மாபெரும்' கட்சியின் நிழலுக்குச் சென்றிருக்கிறாராம்!! அது மட்டுமல்ல, அவரது வெற்றிக்கு அரும்பாடுபட்ட நமது தோழர் அம்பில் தர்மலிங்கத்தின் அபேட்சையை நிராகரிக்கவும், நீதிமன்றம் செல்லுகிறாராம். அவர், அப்படி! இவர் இப்படி!!

*

தென்னாட்டு அரசியலிலே கடந்த மூன்றாண்டு காலமாக, காற்றுக் கோழிகள்,' பல உலவ ஆரம்பித்தன. அந்த கைங்கரியத்தை ஆச்சாரியார் ஆரம்பித்துவைத்தார், அன்பர் மாணிக்கவேலர் மூலம்! கதை தொடருகிறது!! இடமாறுதல், அடிக்கடி நிகழ்கிறது. இன்று, எதிர்முகாமுக்குச் சென்றிருப்போர், கொள்கை பிடிக்கவில்லையெனக் கூறிச் சென்றிடின், சகஜம் எனலாம்! காலமாறுபாட்டின் காரணமாக, கருத்துமாறுதலும் ஏற்படலாம். ஆனால், அவர்கள் அதைக் காரணமாகக் காட்டவில்லை! சேர்ந்ததற்கு விளக்கம்தர ஆரம்பித்து தமது நிலையை சேற்றில் தள்ளிக் கொள்ளுகின்றனர்!! அன்பர் ராஜா சிதம்பரம், காங்கிரசில் சேர்ந்ததற்குக் காரணம் கூறினாராம், "நாட்டுக்கு காங்கிரசே நன்மை செய்ய முடியும்!" என்று. காங்கிரசால் நாட்டுக்கு நன்மையில்லையென்று காங்கிரசை விட்டுக் கைகழுவியவர்தான், அவர்! விலகியிருந்த இந்த இரண்டு மூன்றாண்டுகளில், காங்கிரஸ் என்னென்ன நன்மைகளைச் செய்தது என்கிற பட்டியலைத்தர முடியாது—எவராலும். எனினும், ஏதோ, கூறுகிறார்! ஏதாவது கூற வேண்டுமல்லவா? அதற்காக!! அதே நிலைதான், கடலூர் நண்பருக்கும்.

இவர்கள் இப்படி காற்றடிக்கும் திக்கில் செல்லுவதைப்பற்றி, நமக்குக் கவலையில்லை. அரசியல் வானில் மின்னுவதெல்லாம், பொன்னல்ல! பறப்பதெல்லாம், ராஜபட்சி அல்ல!! ஆனால், இத்தகையோரால் பொது வாழ்வு, எவ்வளவு களங்கமடைகிறது. மக்களை மாக்கட்டைகள் என்றன்றோ, எண்ணிவிடுகின்றனர்!

இல்லையெனின், இவ்வளவு துணிவு பிறக்குமா? பதவியும் பட்டமும் பெற்றுவிட்டால், பல்லிளிக்கப் பலருண்டு! பல்லவி பாடவும் தயாராக யிருப்பர்!! அதுபோதும் — என்றன்றோ, ஆகிவிடுகின்றனர். அதனால், பாதிக்கப்படுவது, யார்? தன்னை நம்பிய சமுதாயமன்றோ! போற்றிப் புகழ்மாலை சூட்டிய பொதுமக்கள் அன்றோ புண்ணில் வேல்பாய்ந்த நிலை பெறுகின்றனர். அவர்களது வேதனையைத் தமது 'வியாபாரப் பொருளாக' மாற்றி அரசியல் வாழ்வில் அந்தஸ்து தேடுவோரை, காலம்மறக்காது! நிச்சயம் பாடங்கூறும்! — அதனை, நினைவுறுத்துகிறோம், அவர்களுக்கு.

❀

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை

(1)

இப்போது காங்கிரஸ் மந்திரிகள் —காரியாலயமாய், அரசாங்கக் காரியதரிசிகள், அவர்களது பரிவாரங்களின் அலுவலகமாய் பட்டாளப் பகுதியின் படைவீடாய் எல்லாம் திகழுவதும் மண்மூடிய மதிற்சுவர்கள், தூருவேறிய இரும்புக்கிராதிகள், 'கேட்டு'கள், தூர்ந்து போன அகழிகளுடன் காட்சி தருவதுமான ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டைஉருவாகி, உரம் பெற்ற கதை சுவாரஸ்யமானது.

கதை என்றதும் பலருக்கு நமது நாடோடிப் பாடகர்களின், "ஆட்டுத் தோலுக்கிடங்கொடுத்ததாலே, அனர்த்தம் தேடிக்கிட்டான்" என்ற பாடலின் வரிகள் கூறும் கதை அல்ல. ஆனால் ஒண்ட வந்த பிடாரிகள் ஊர்ப்பிடாரிகளைவிரட்டி ஊராள்வோராக மாறிய கதை—கூடாரத்திற்குள் இடம் கேட்டு நுழைந்த ஒட்டக வியாபாரியை வெளியேதள்ளிய விதத்தில் நடைபெற்ற விருத்தாந்தம்—சரித்திரத்தில் காணக்கிடக்கிறது.

ருசியான உணவு சமைத்து உண்ண ஐரோப்பியரும் ஆங்கிலேயரும் கற்றுணர்ந்த சமயம் அது. வெறும் வேகாத இறைச்சியையும் ரொட்டியையும் தின்று கொண்டிருந்தவர்கள் மென்று தின்னும் இறைச்சிக்கு காரமேற்ற மிளகு பேருதவி செய்வதை உணர்ந்தகாலம். மேலும் உடைக்கு பருத்தி தேவைப்பட்டதை அறிந்த நேரம்.

இந்தியாவை-குறிப்பாகத் தென்னிந்தியாவை விட்டால், பருத்திக்கு வேறு இடம் இல்லை என்ற சூழ்நிலை நிலவியது.

இந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்த போர்ச்சுகீஸிய வர்த்தகர்கள் சந்தர்ப்பத்தைப்பொன்னாக்கிக் கொள்ளை லாபமடித்தனர். இதைப் பார்த்த பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. லண்டனிலுள்ள சில வர்த்தகர்கள் கூடி கீழ்த்திசை நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொள்வதற்காக ஒரு கம்பெனி நிறுவினார்கள். அந்தக் கம்பெனிதான் 1600ம் ஆண்டில் ஸ்தாபிதமான ஈஸ்ட் இந்தியா கம்பெனி.

ஆங்லேயர்களுக்கு உதயமான யோசனை போலவே டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்களுக்கும் யோசனை உதித்தது.

அந்தக் காலத்தில் இந்தியாவிற்குக் கடல் கடந்து வருவது என்பது சுலபமான காரியமல்ல. எனினும் செயற்கரும் செயல் செய்ய வேண்டும் என்ற சிந்தனையிருந்தது அவர்களிடம், அச்சிந்தனையைச் செயலாக்கும் துடிப்பு இருந்தது. நிரம் இருந்தது. அவர்கள் சிறு பாய்மரக் கப்பலில் வந்தார்கள்.

1612-ம் ஆண்டில் சூரத்திலும் 1616-ல் மசூலிபட்டினத்திலும் 1626-ல் புலிக்கட்டத்திலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் கிளைகள் அமைக்கப்பட்டன. 1639-ம் ஆண்டில் பிரான்ஸிஸ்டே என்பவர் இன்னும் தெற்கே வந்தார். கூவம் நதிக்கும், கடலுக்கும் இடையே பாழ்கிடந்த பிராந்தியத்தைப் பார்த்ததும் இந்த இடத்தில் ஒரு கோட்டை அமைக்கலாம் என்ற எண்ணம் பளிச்சிட்டது அவருக்கு. அதுவரை கம்பெனிக்குச் சொந்தமாக இந்திய மண்ணில் இடம் எதுவும் இருக்கவில்லை. 'இடம் பெற வேண்டும்; அங்கு கோட்டை கட்ட வேண்டும்' என்ற எண்ணம் தோன்றியவுடன் சந்திரகிரி அரசனைப் பார்த்து அந்த இடத்தில் கம்பெனிக்குச் சொந்தமான கட்டிடம் கட்ட அனுமதி வாங்கிவிட்டார் பிரான்ஸிஸ் டே.

"அபிப்பிராயங்கள் மின்னல் வேகத்தில் மாறும் தன்மையன. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறிவிட்டால் பின்பு சந்தர்ப்பத்தைத் தேடி நீ ஓட நேரிடலாம். ஓடினாலும் கிட்டுமோ என்பது சந்தேகமே!" என்பது ஒப்பந்தத்தை முடித்துத் திரும்பிய அவர், தம் சகாவிடம் கூறிய வார்த்தைகள்.

கோட்டை கட்டுவதற்கு வேண்டிய உதவிகள் செய்வதாக வாக்குறுதி கொடுத்த ராஜா அதைப் பின்பு மறந்துவிட்டார். இருந்தும் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டிடங்கள் கட்டி பதின்மூன்று வருஷங்களில் ஒரு சிறியகோட்டையை ஸ்தாபித்து விட்டனர் கம்பெனியார்.

1653-ம்-வருஷத்தில் கோட்டை அமைந்து விட்டது. இன்றைய அரசாங்கக் காரியாலயம் அமைந்திருக்கும்கட்டிடம் பிரான்ஸிஸ்டே அமைத்த கட்டிடம் தான். அந்தக் கட்டிடத்திற்கு வடக்குத் திசையில் சில சிறு கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. அவற்றைத் தவிர சுற்றுப்புறத்தில் வேறு கட்டிடமே கிடையாது. இப்பொழுது பட்டாள உபயோகத்திற்காக உள்ள பகுதியெல்லாம் அந்தக் காலத்தில் ஆறு ஓடும் இடமாக இருந்தது. ஓயாது ஒழியாது அலைகீதம் இசைக்கும் கடல் கோட்டைக்கு மிகவும் அருகாமையில் இப்பொழுது ரஸ்தா நீண்டு செல்லும் பகுதிவரை பரவியிருந்தது.

கட்டிடங்கள் அதிகரிக்க மேலும் இருபது வருஷ காலம் பிடித்தது. ஆற்றையடுத்து வீடுகளும், காம்பவுண்டுச் சுவர்களும் எழுந்தன. வடபுறத்தில் சாமான்கள் போடக் கிடங்குகள் அமைக்கப்பட்டன. மூன்று புறமும் மதிற்சுவர்கள் கட்டப்பட்டன.

❀

தொடர் கதை என்று முடியும்?

ஒரே வெட்டு! குதிரையின் தலை துண்டிக்கப்பட்டது! குருதிக்குளத்திலே மிதக்கும் குதிரையைக் கட்டியணைத்துக்கிடக்கிறாள், கனிரசவல்லி! கையிலே வாளேந்தி வெட்டியவளும் அவள்தான்! செத்த குதிரையோடு சிங்காரி!! இரவு முழுவதும், இருக்கிறாள். கணவனைத் தழுவுவதுபோல், அசுவத்தின் உடலை அணைத்துக்கொண்டு கிடக்கிறாள்! அவளென்ன, பேதையோ பித்தமேறிய சித்ராங்கியோ?—அல்ல, அல்ல! பெரிய இடத்துப் பெண்! சூழ்ந்து நிற்க ஆயிரமாயிரம் தாதிகள் உண்டு அவளுக்கு. துடியிடையும் கொவ்வைச் செவ்வாயும், குமுதக் கண்களும் பெற்ற கோமளாங்கி! கண்டோர், மயங்கும், காமவல்லி! அவள், இப்படிக் கிடக்கிறாள். கைபிடித்த கணவனோ, 'கண்ணே! மணியே! கட்டியணைத்துக்கிட, குதிரையை!' என்று கூறியபடி நிற்கிறான்—அருகே! எங்கே இந்த விசித்திர நிகழ்ச்சி என்பீர்கள். யார் அந்தக் கட்டழகி என்பீர்கள்—கணவனோ, அவன், என்றும் காரியமிழத் தோன்றும். அவசரப்படாதீர்கள், இருவரையும் அறிமுகம்செய்து வைத்தால், இங்குள்ள சிலருக்குக் கோபம் வரும்!

*

"சுந்தரி, சுபத்ரா!"

"நாதா!"

"அக்கா கௌசலையும் அருமை கேகயியும் எங்கே?"

"அழைத்து வருகிறேன்!"

"மும்மணிகளே! முழு நிலவை யொத்த பெண்மணிகளே! இன்று இரவு முழுவதும்......"

இரவு முழுவதும், என்ன நாதா?"

"இதோ, இந்தப் புரோகிதர்களும் நீங்களுமாக, இஷ்டம்போலிருக்க அனுமதிக்கிறேன்—உங்களை!"

"சரி, நாதா!"

*

"ஏ! தசரதராஜன் — உம் இச்சைப்படி இரவு முழுவதும் இருந்தோம், உமது நாயகிகளுடன். எங்கே, அதற்குத் தக்ஷணை!"

"பெரியவர்களே, பிறக்குமா இனி எனக்குப் பிள்ளை?"

"ஐயம், வேண்டாம்! அதற்கான முயற்சிகளை இரவு முழுவதும் செய்திருக்கிறோம்"

"தங்கள் சித்தம், என் பாக்கியம்!"

*

தடை செய்யப்பட்ட நடிகவேள் ராதாவின் 'ராமாயணம்' நாடகம் நடந்திருந்தால், இந்தக் காட்சிகளைக் கண்டிருக்க முடியுமோ, என்னமோ! புத்திரப்பேறில்லாத தசரதன், புத்திரகாமேஷ்டி யாகம்செய்கிறானே—அயோத்தியில். அதன் அலங்கோலக் காட்சிகள்தான், மேலே குறிப்பிட்டிருப்பவை! மகனில்லாத காரணத்துக்காக மனைவிகளை 'தனியே' அனுப்பிய விஷயமும், அசுவத்துக்கும் ஆருயிர் மனைவிக்குமிடையே தொடர்பு உண்டாக்கிய சங்கதியும் தூ! தூ! காறித் துப்புவர், கேட்போர். ஆனால் அதற்கு கடவுள் மகத்துவம் தரப்பட்டுவிட்டதால், பூஜைபோட்டு சூடதீப நைவேத்யங்களுடன் கன்னத்தில் போட்டுக்கொள்ளுகின்றனர்!

இதெல்லாம், கடவுள் கதையாம்!! இதனை நடத்தும் 'நவாப்' ராஜமாணிக்கம், அருஞ்சேவை செய்பவராம். திரையுலகில் காதல் காட்சிகளைக் கண்டதால், மக்களின் மனதில் தீய எண்ணங்கள் புகுந்திடுவதாகச் செப்பிடும் திருவாளர்கள் சென்று, அவருக்குபுகழ்மாலைசூடிப் போற்றியிருக்கிறார்கள். அதற்கு முதல் நாள் அவரைப்போன்ற நாட்டின் நடிகமணியாம் ராதாவுக்கு, வைதீகத்தின் அடிவருடியான அரசு, தடைபோட்டிருக்கிறது. தியாகராய நகரில் திருவிழா, ஒருவருக்கு! ஒற்றைவாடையில் ஒருவருக்கு வாய்ப்பூட்டு! 'நவாப்' பக்தியைத் தருகிறாராம்—அதனால் பாராட்டாம். ஆனால், புத்தியைத் தரும் ஒரு இலட்சிய நடிகனுக்கு, தடை. அதுவும், சீதையும், ராமனும், தசரதனும், படை வரிசைகளும் 'மேடை'க்குப் புறப்படத் தயாராயிருக்கின்றனர்! அவர்களைக் கண்டுகளிக்கக் கூடியிருக்கும் மக்கள்—பெரிய மனிதர்கள், அல்லி மக்கள்!!—கோட்டைக்கு வெளியே கூடிக்கிடக்கிறார்கள் — ராதா, ராமனுமே! ராதாவின் கம்பெனியில் ராமாயணமாமே!!, எனும் ஆச்சரியப்பேச்சோடு. இந்நிலையில், தடை, வருகிறது நாடாளும் நாயகர்களிடமிருந்து! அந்தத் தடை வராவிடில், நாட்டில் புரட்சி பூத்துவிடும் எனும், கருத்தோடு!! தடைகளை வீசுவது, தர்பார் ஏறிய காங்கிரஸ்காரர்களுக்குச் சகஜமாகிவிட்டது. அவர்களைப்பிடித்து தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வதும் ஆரியந்தாங்கிகளுக்கு சுலபம் ஆகிவிட்டது.

அன்பர் ஆச்சாரியார், வானொலியில், ராமாயணகாலேட்சபம் செய்கிறார்! அந்த ஏட்டை, ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் பரப்பிட முயல்வோர், பலர்!!! ஆனால், அதோ நாடகத்தை உள்ளது உள்ளபடியே, நடத்தமுன்வந்த ராதாவுக்குத் தடை. உண்மைகளே. இந்த அரசுக்கும், அதை அடிவருடும் ஆரியத்துக்கும், எப்போதும் கசப்பானது போலும்! தடைபிறக்குமுன்பு ராதாவின் ராமாயணம் எப்படியிருக்கிறது என்பதையாவது ஒருமுறை பார்த்திருக்கலாம், அரசினர்! அதற்குக் கூடப்பொறுமையில்லை— அதிகாரம் இருக்கிறதென்னும் துணிவில், தடை பிறப்பித்துவிட்டனர். தடைகள், ஒரு கொள்கையின் வெற்றிக்குக்கிடைக்கும்வெகுமானங்கள். முன்பிருந்தோர், இப்படித்தான் நமது இயக்கநாடகங்கள் பலவற்றிற்குத் தடைபோட்டனர். என்ன ஆயிற்று? 'சொர்க்கவாசலில்' மக்கள் கூறுவதுபோல, "மன்னனுக்குத் தடைவிதிக்கத் தெரியும்!

"மாவீரருக்கு அதைமீறத்தெரியும்!" என்று காட்டினர், மக்கள். அது போல, இப்போதும் செய்யக்கிளம்பினால், பூட்டிடப் புதுச்சிறைகளன்றோ கட்டப்படவேண்டும். தட்டிக்கேட்க ஆளில்லையென்றதைரியமா! பெரியார் இராமசாமி அவர்களின் பிரியத்தைப் பெற்றுவிட்டோம் என்கிற திமிரா! சட்டசபை நுழையும்வரைதானே இவர்கள் தயவுதேவை, இனி ஏன்? என்ற எண்ணமா! எதுவாயினும் காமராஜரின் ஆட்சி, குத்திக்கொண்ட கரும்புள்ளி என்போம், இதனை.

ராமாயணத்தின் கட்டங்களை எடுத்துவைத்துக்கொண்டு, அலசி அலசி ஓய்ந்துவிட்டோம். தசரதனுக்கு அறுபதாயிரம் மனைவிகள் என்று கம்பன் கூறுகிறான்! மூன்னூற்றுஐம்பது மனைவிகள் என்று வால்மீகி எழுதுகிறான்!! ஆரம்பத்திலிருந்து முரண்பாடும், மூடக் கருத்தும் நிரம்பிய கதை, இது. ஆயிரத்தொரு இரவுகள் எப்படி அராபியருக்கும், மதன காமராஜன் கதை எப்படி நம்மவருக்கும், ஒரு பொழுதுபோக்கு நூலாக இருக்கிறதோ, அதுபோலத்தான் இராமாயணமும். ஆனால், அதனை, கடவுட்காதையாக்கி, அந்தக் கடவுளின் மகத்துவத்துவத்தை விளக்குவதாக விபரீதக்கதைகளைக் கட்டி விரசமாக்கிவருகின்றனர், மக்கள் உள்ளத்தை. குழந்தைப் பேறில்லாத தாசன், ஆடுகளையும் மாடுகளையும் வெட்டி, யாகம்செய்து அப்படியும் பயனின்றி ஏதேதோசெய்து, எப்படியோ பெற்றானும் புத்திரர்களை!— இது, ஒரு நூல் இன்னொன்றில் பூலோகத்தில் இராட்சதர்களுடைய அக்கிரமங்களைப் பொறுக்கமுடியாத தேவர்கள், கைலாயபதியை நாட, அவர் விஷ்ணுவைத்தேடி வந்து செப்ப, விஷ்ணு ராமனாக அவதரித்தார், என்று ஒரு விளக்கம். ஜலந்திராசூரன் என்பான் ஒருவன்! அவன் மனைவி ஓர் அழகி! அவளைக்கண்ட திருமால், உள்ளம் பறி கொடுத்தார்— ஊனுறக்கம் விடுத்தார்— தந்திரமாக அத்தையலைக் கெடுத்தார்— அதனால், ஏற்பட்ட சாபத்தாலேயே பூலோகத்தில் பிறந்தார்!— இப்படியொன்று. பகல் நேரம்! அவரவர்கள் பல தொழில்களில் ஈடுபட்டிருக்கும் சமயம்! நீலமேகச் சியாமள வர்ணனே, அந்தப் பகல் நேரத்தையும் வீணாக்காது பத்தினி லட்சுமியுடன் படுக்கையறையில், இன்பம் அனுபவித்துக் கிடந்தார். இதனால் ஏற்பட்ட சாபத்தால்: தான், மானிடப் பிறவியெடுத்தார்!— இப்படி, இன்னொன்று. பலப்பல! இதில் எதனை நம்புவது? அயலான் மனைவியைக் கூடுவதும், அர்த்தராத்திரி வேலையை அறுபது நாழிகையும் செய்வதும்தானா, ஆண்டவனின் லீலை?— அதற்குக்கிடைத்த சாபத்தால், பூலோகத்தில் பிறந்தும், நாயகியைத் தீக்குளிக்கச் சொல்வதும், மலர்போன்ற பெண்ணொருத்தியின் அங்கங்களை அறுக்கச் சொல்வதுமா, ஆண்டவனின் செயல! ஆபாசம்! ஆபாசம்!! ஆண்டவனின் பெயரைச் சொல்லி, வயதானவர்கள், தங்களது பால்ய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக் கொள்ளப் பயன்படுத்துவதற்காகவா இப்படியொரு, கதை? ரசம், வழிகிறதாம்! பக்திரசம் பருகுகின்றனராம்!! மூலக்கதையும், கம்பன் கதையும், செச்சே!— கொக்கோக நூலின், புதுப்பதிப்பு போலன்றோ, உள்ளன? இதனைப் பரப்புகிறாராம், நவாப்! நாடக மேடையில் அனுமார் வேடந்தாங்கி அவர் ஆடிடும் கூத்துக்களைக் காணும் நல்லோர், அருவருப்பர்!! அவர்கள் எல்லோரும் போற்றும் நேரு பண்டிதர், மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில், "குழந்தாய்! இராமாயணமும், பாரதமும், இரு பெரும் இதிகாசங்கள். இராமாயணம், ஆரியருக்கும் திராவிடருக்கும் நடந்த போராட்டத்தைப் பற்றிக் கூறுகிறது. பாரதம், ஆரியருக்கும் ஆரியருக்குமிடையே நடைபெற்ற சண்டைகளைப் பற்றிச் சொல்லுகிறது," என்று தீட்டியிருக்கிறார். அவரது சிஷ்யகோடியோ, குரங்கு வேஷம் போட்டுக் கூத்தடிக்கிறார்! ஒரு இனத்தையே ஏளனம் செய்கிறார்!! அதற்கு பாமாலை, பூமாலை, பட்டமளிப்பு, வைபவம், வாழ்த்துரை. அது, அல்ல! உள்ளதை உள்ளபடி காட்டுகிறேன்!—என்று, முன்வரும், ராதாவுக்குத் தடை மறுப்பு!! ஆச்சாரியாரும், சச்சிவோத்தமரும், ஆடுகின்றனர்— பாமாலை சூட்ட. ராதாவை நாடி மக்கள், வருகிறார்கள்! அந்த மக்களைத் தடுக்க, தடை, வருகிறது— புரோகிதப் பூசாரிகளிடமிருந்தல்ல! அரசிடமிருந்து!!

*

சீப்பை எடுத்து ஒளித்துவிட்டால், திருமணம் நடவாது—என்றெண்ணினாளாம் ஒரு பேதை! அந்தப்பேதைக்கும் இந்த அரசுக்கும், எள்ளளவும் வித்தியாசம் இல்லை!! ராமனும் சீதையும் தசரதனும் கௌசலையும் மூலைக்கு மூலை உலவும் நாட்டில், இதே ராமாயணத்தின் மூலம் சொல்ல விரும்புகிற விஷயங்களைக் கூறுவதற்கா, வழியில்லை? இல்லை!—எனும், எண்ணத்தில்தான், அரசு தடை செய்திருக்கி

அன்பழைப்பு

9—9—54 காலை விருத்தாசலம் கோட்டைவெளி வீதி 6-எண்ணுள்ள இல்லில் தோழியர் ஆண்டாள் அம்மையை என் வாழ்க்கைத் துணைவியாக, மாவட்ட ஆவணப் பதிவாளர் முன்னிலையில் ஏற்கும் விழாவுக்கும், மாலையில் நடைபெறும் சிதம்பரம் இசைவாணர் சி. எஸ். ஜெயராமன் அவர்களின் இன்னிசைக்கும் வருகைதந்து மகிழ்விக்க வேண்டுகிறேன்.

அன்பன்,

அரங்கண்ணல்

றது. அந்த அரசுக்கும் ஆரியத்துக்கும் எச்சரிக்கிறோம்! இப்படியொரு சமூக சித்திரம், வந்தால் என்ன செய்வர்? "சீதாராமன்"— சிறந்த சமூகசித்திரம்—என்று, ராதாவோ, அவரைப்போன்ற நடிகமணிகளோ, புதுமையான நாடகம் ஒன்றைத் தயாரித்து அரங்கேற்றமுடியாதா? தசரதனை ராஜனாக்கினால்தான் ஆபத்து! அதே, தசரதனை 'நாயுடு' வாக்கி, ஓர் ஒரு ஊரில் தசரத நாயுடு என்று ஒருவர்— அவருக்கு மூன்று மனைவிகள்—அவர்களுக்கு ராமசாமி, பரதன், லட்சுமணன், சத்ருக்கன் என்று குழந்தைகள். தசரத நாயுடுவுக்கு, நிலபுலம் ஏராளம்! அதைக்கவர எண்ணினாள், இரண்டாவது மனைவி!! தந்திரமாக கணவனைக் கொன்றுவிட்டு ராமனை வெளியூருக்கு விரட்டினாள்...... என்று ஆரம்பித்து, அந்த ராமனும் ஒரு 'கேடி'—அவனுக்கு குறுமதி அதிகம், அதனால் வெளியூரிலிருந்த இராவணன் எனும் சீர்திருத்தவாதியோடு சண்டைபோட முயன்றான்—காரணம், இராவணனின் அழகிய தங்கையைப் பெண்டாள நினைத்த பேதைமையே ஆகும்—அந்தக் கொடுமை கண்ட இராவணன், பழிக்குப் பழியாக, ராமன்மனைவியைத் தூக்கிக்கொண்டுபோய் வைத்திருந்தான்...என்று கடைசிவரை, அதே கதையை, ஜடாமுடிக்குப்பதில், சூட்டும் மாஉரிக்குப்பதில் கோட்டும் போட்டு ஆடிடமுடியாதா? அதே வசனங்களுக்குப்பதில், புதுவசனங்களை எழுதி, எண்ணிய எண்ணங்களைச் சொல்லமுடியாதா? சொன்னால், புரிந்துகொள்ளமாட்டார்களா மக்கள்! வழி, ஆயிரம் உண்டு—அதனை மறந்து, தடைபோட்டிருக்கின்றனர், தடை. இந்தத்தடை, ராதாவுக்கு ஒரு வெற்றியாகும்! புதுக்கருத்துக்களுக்கு ஒரு கேடயமாகும்!!

தடையாலும்படையாலும், தமது ஆபாசங்களைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்ற எண்ணம் எப்போதும் பலித்ததில்லை. இதனை, அரசுக்கு ஞாபகமூட்டுகிறோம். அதே நேரத்தில், 'நவாப்'பைப் பாராட்டுவதால், கடவுளுக்குப் புதுப் படை திரட்டிடலாம் என்று புறப்பட்டிருக்கும் 'மயிலைவாசிகளுக்கும்' தெரிவிக்கிறோம். 'நவாப்' நல்லவர்! உங்கள் பொம்மையாகவிளையாடுகிறார்! அவர் ஒருவர்தான், உங்களுக்கு. ஆனால், புதுமை இயக்கத்துக்கோ, ஒரு ராதா அல்ல — அவரது வரிசை, பல உருவில் இருக்கிறது!! எனவே, பாராட்டையும் வெள்ளிப் பேழைகளையும், நிறைய அளியுங்கள்—உங்களைவிட மகத்தான 'மக்கள் சக்தி' இங்கே இருக்கிறது—நீங்கள் பழுத்த இலைகள்! இங்கேயிருப்பது, இலட்சியக்கொழுந்துகள்!! எனவே, நன்றாகச் செய்யுங்கள்—அப்படியாவது ஒரு திராவிடமகன், வாழட்டும்.

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

மூன்றுமாதகாலம் விடுமுறை எடுப்பதாலோ, எனது விரோதிகளின் சூழ்ச்சியினின்றும், நான் மீளமுடியாது. ஆகவே, திடமான முடிவுக்கு வருகிறேன். நான், தனி மனிதன்! நாடு, மிகப்பெரிது!! நாடு, வாழ வேண்டும்—இன்று அது நயவஞ்சகரின் மடமாகிவிட்டது—மக்களும் மந்தைச் சுபாவம் கொண்டுவிடுவரோ என்று அஞ்சுகிறேன். இந்த மக்களின் மனதில், உணர்ச்சியைத் தூண்டி, அவர்களை அடிமையாக்க அமெரிக்காவும்சதிகாரர்களும் செய்யும் சூழ்ச்சியை அம்பலப்படுத்த வேண்டுமானால்—வேறு வழியில்லை! நான் சாகத்தான் வேண்டும்."

நாலரை மணி நேரம், இப்படி யோசித்தான்! யோசிக்கவேண்டிய அவசியமில்லை—'இந்தா! எடுத்துக் கொள்!' என்று தந்துவிட்டு காவியுடையோ, 'கம்பராமாயணமோ' ஏந்திக்கொண்டு போயிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. மனம் நொந்தான்! ஏடு, எடுத்தான்!! எழுதினான்,

நான், சாகிறேன்—நாடு, வாழ்!

நான் போகிறேன்—நாட்டோருக்காக!!

சாகிறேன் — சரிதத்தில் நுழைகிறேன்!!!

அந்த வரிகளை, மறுநாள்........ சேதி கேட்ட மக்கள் எரிமலையாயினராம்! எந்தப் படை அவனை அவமதித்ததோ, அது கண்ணீர் வடித்ததாம்!! நாடே, கலங்கி அழுததாம். அந்தக் கொந்தளிப்பைச் சமாளிக்க பிரேசிலின் துணைத் தலைவர், வானொலி மூலம், இப்பபடிப் பேசினாராம்—

"வர்காஸ்—காட்டிய பாதையிலேயேநானும்செல்வேன். அவரை வீழ்த்திய அந்நிய சதியை எதிர்ப்பேன்" என்பதாக. அந்நியர் என்று வர்காஸ் குறிப்பிட்டது, ஐசனோவர் பூமியை! அதுதான், சிறுபொறி மூலம், பெருந்தீயைக் கிளப்பித் தன்னை விலக்குமளவுக்கு விபரீதத்தை வளர்த்தது-என்று வர்காஸ் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். "அதன் சூழ்ச்சியை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்— அப்போதுதான் என் நாட்டுமக்கள்இனியாருக்கும் அடிமையாயிருக்கவிரும்பமாட்டார்கள்—அதற்குக் கொடுக்கப்படும் விலை, என்னுடைய உயிர்" என்று எழுதிவிட்டு, இறந்தான். அவன் செத்தான், பிறர் வாழ மாண்டான், மக்களின்கண்களைத் திறப்பதற்காக!! மனிதத் தன்மையின் எல்லையைக் காட்டிய வீரபுருஷன் அவன்—உண்மையான, மனிதன்—மனதைவிட்டு, ஒருபோதும், மறையாத மனிதன்—செத்தும், சாகாத மனிதன்!!

★

டாக்டர். விசாலாட்சி நெடுஞ்செழியன்

டாக்டர். ஆர். விசாலாட்சி நெடுஞ்செழியன் M. B. B. S., M.P.H., D. M C H., அவர்கள் சென்ற ஓராண்டு காலமாக அமெரிக்காவில் பால்டிமோரிலுள்ள ஜான்ஹாப்ஹின்ஸ் பல்கலைக்கழகத்தில் படித்து M. P. H. பட்டம் பெற்று, 10-9-54 வெள்ளியன்று காலை 11-45 மணிக்கு விமானம் மூலம் சென்னை வந்து சேர்கிறார்கள். சென்னை மாநிலத்திலிருந்து அமெரிக்கா சென்று M. P. H. பட்டம் பெற்று மீளும் முதல் W. M. O இவர்களே ஆவார்கள்.

17. நல்லமுத்து விடுதலை

பேசாமல் அந்த முடிச்சை வாங்கிக்கொண்டான்.

"இதில், என்ன கட்டிவைத்திருக்கே?"

"இது இருந்தா உனக்கென்ன" "சரி. நான் போகிறேன். யாராவது வந்தா, என்னை பார்க்கவே இல்லையென்று கூறிவிடு. தெரியுதா......"

"ஏனும், அப்படி, என்ன பண்ணிட்டு வந்தே, உன்னைத் தேடிக்கொண்டு யார் வருவா. முன்னே தான் போலிசு வருவாங்க. இப்போதான் வேலைக்குப் போயிட்டியே!" என்று அவன் அவ்வளவு சீக்கிரம் புறப்பட்டதைக் கண்டு வருத்தமடைந்த பொன்னி கூறினாள்.

'போலிஸ்' என்றதும் ஆறுமுகத்திற்குக் கோபம் வந்தது.

"சரிதாண்டி, கழுதே. நான் சொன்னதைச்செய்" என்று அவள் கழுத்தில் கையை வைத்து அவளை ஒரு தள்ளுத்தள்ளிவிட்டு வெளியே ஓடினான், ஆறுமுகம்.

பொன்னி அவன் தள்ளியதை சமாளித்தவண்ணம் "குரங்கு! குரங்கு!!" என்று கத்திக்கொண்டே அப்படியே சாய்ந்து கொண்டாள். அவள் எழுந்து வெளியேவந்து பார்ப்பதற்குள் ஆறுமுகம் வெகு தூரம் போய்விட்டான்!

பொன்னி வீட்டை விட்டுப் புறப்பட்ட ஆறுமுகத்தின் வாழ்க்கை ஒரே ஓட்டமாகத்தானிருந்தது.

உத்தமாதபுரத்தைத் தாண்டியதும், மெயின் ரோட்டில் யாரோ இரு போலிஸ்காரர்கள் வந்துகொண்டிருந்தனர்.

சிகப்புத் தொப்பியைக் கண்டதுமே அவனுக்கு திக்கென்றது. மறுபடியும் மெயின் ரோடிலிருந்து கீழே இறங்கி முன்னாலிருந்த குடிசைக்குள் போய் நுழைந்துகொண்டான். எதிர்த்தாப்போலிருந்த நாயர் டீக் கடைக்குத்தான் அந்த இரு போலிஸ்காரர்களும் வந்தனர். நாயரோடு ஏதோ பேசினர். பேசிக்கொண்டே இரண்டு கப் டீயை வாங்கிக்கொண்டு அங்கிருந்தபலகையில் உட்கார்ந்து கொண்டனர்.

ஆறுமுகத்தைப் பயம் மறைத்தது.

இரண்டு போலிஸ்காரர்கள் இரு நூறு போலிஸ்காரர்கள் போல் தோன்றியது. ஆம்! அதில் ஒரு போலிஸ்காரன் விலங்கை எடுத்து வந்து அவன் கையில் பூட்டுவது போலக்கூடத் தோன்றியது.

"ஓ...! என்று கத்திவிட்டான், ஆறுமுகம்.

கத்தியவுடன்தான் இரு போலீஸ்காரர் எதிர் வீட்டிலேயே இருக்கும் உணர்வு வந்தது. பயந்துபோய் வெளியேவந்து சுவரோரமாகநின்று பார்த்தான். அந்த இரு போலிஸ்காரர்களும் அப்பொழுதுதான் டீ குடித்துவிட்டு எழுந்து போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் மெயின் ரோடில் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெதுவாக வெளியே வந்தான். மறுபடியும் ஓட ஆரம்பித்தான்.

அப்பொழுது மணி நாலு இருக்கும். இருட்டுவதற்குள் அவன் எங்காவது பத்திரமான இடத்திற்குச் சென்றுவிடவேண்டும். இன்றிரவு எப்படியும் போலிஸ் அவனைத் தேட ஆரம்பித்துவிடும்.

நேராக எழும்பூர் சென்று ரயில் ஏறிவிட்டால்தான், என்ன?

ஐயோ, அதைவிட ஆபத்தானது என்ன இருக்கமுடியும்?

ஒரு குற்றவாளி மறைந்தால், போலிஸ்காரர்கள் முதலில் ரயில் நிலையத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். அப்படி இருக்கும்பொழுது நேராக ரயில் நிலையத்திற்குப்போய் மாட்டிக்கொள்வதா?

அது சுத்தப்பைத்தியக்காரத்தனம். அவன் இன்றைக்கு ரயில் கவிலேயே ஏறக்கூடாது அதுவும் அந்த மோதிரங்களையும் மணிப்பர்ஸையும் வைத்துக்கொண்டிருக்கும்போது!

இருட்டுவதற்குள் நகரத்திற்கு அருகிலுள்ள சேரிகள் எதற்காவது ஓடி விட வேண்டும்.

அவனுடைய நண்பர்கள் யாரையாவது சந்திக்கலாமா?

கூடவே கூடாது! யாரை நம்ப முடியும் இந்த உலகத்தில். தப்பித்தவறி அவர்களில் ஒருவரே கூட போலிஸ் உளவாளியாக இருக்கலாம்.

இப்படி அலைந்து கொண்டிருக்கும் எண்ணங்களோடேயே சைனா பஜாருக்கு வந்து சேர்ந்தான்.

அப்பொழுது மணி ஆறாகிவிட்டது. மாலை நேரத்திலே சைனாபஜாரில் இருக்கும் பிரம்மாண்டமான கூட்டம் இருக்கிறதே, யாராவது புதிதாக சென்னைக்கு வந்தால் ஏதோ திருவிழா நடக்கிறது என்று தான் கூறுவார்கள். அவ்வளவு கலப்படமான கும்பல் வரும்.

அந்தக்கூட்டத்திலே ஜேப்படித் திருடனிருப்பான்; ஜோராக சிங்காரித்துக்கொண்டு கதியற்ற மங்கையைத் தேடும் கனவானுமிருப்பார்; காசு வைத்திருக்கும் சீமானைத் தேடும் நடைக்கன் வீச்சுக்காரிகளுமிருப்பர்! ஓர் அணா சாமானை ஒரு ரூபாய்க்குவிற்பவருமிருப்பர்; கடையில் ஒரு ரூபாய் விற்கும் சாமானை ஒரு அணாவுக்கு கொடுப்பவருமிருப்பர். சென்னையின் அத்தனை விதமான உருவங்களையும் அந்த நகரத்தின் நடைபாதையில் பார்க்கலாம்.

பாட்டைத்தலையோடு பிச்சை கேட்கும் கதியற்ற மங்கையரையும், பகட்டானசேலைமின்ன டால்அடிக்கும் வைரக்கம்மலோடு 'ஷாப்பிங்' செய்யும் பணக்காரவீட்டுப் பெண்களையும் பார்க்கலாம்.

அந்தச்சந்தடியில்சாவதானமாகக் குடித்தனம் நடத்தும் கூலியாட்கள் குடும்பமுமிருக்கும்.

குடும்பத்தோடு சர்மான்கள் வாங்கும் கனதனவான்களும் இருப்பர்.

இப்படிப்பட்ட பெருங்கும்பலில் ஆறுமுகம் நுழைந்தான்.

அந்தக் கும்பலில் அவனை அடையாளம் கண்டுபிடிப்பது சிரமம்.

ஆனால் கண்டுபிடித்துவிட்டால், அதற்குப் பிறகு தப்பவே முடியாது! ஆகவே சீக்கிரம் சைனா பஜாரைத்தாண்டி ஹைகோர்ட் பீச்சுக்குச்சென்றுவிட நினைத்து வேகமாகப் போனான், ஆறுமுகம்.

பிராட்வே முனையைத் தாண்டியவுடன் நடைபாதையில் இருந்த நாலைந்து பத்திரிகை போஸ்டர்களும் அவன் கண்ணில் பட்டன. அந்த போஸ்டர்கள் மேலேயே ஜனங்கள் நடக்கக்கூட ஆரம்பித்துவிட்டனர்.

ஏதோ அந்த போஸ்டரில் அவன் கவனத்தைத் திருப்பியது, சட்டென்று நின்று பார்த்தான்.

ஐயோ! மறுகணமே அவனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

"உத்தமநாதர் கொலை வழக்கு! மறைந்தவர் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. டிரைவர் மறைந்தமாயம்!" என்ற தலைப்புகளை அவன் படித்து முடிக்க இரண்டு நிமிடங்கள் ஆயின.

ஆகவே போலீஸார் கண்டுபிடித்துவிட்டனர். ஆறுமுகம் அகப்பட்டுக் கொண்டான்!

பயத்தைத் தாங்கமுடியாமல் வெடவெடத்த கைகளோடு தலை நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பேப்பர்க் கடைக்காரன் அவனை உற்றுப் பார்த்தவண்ணமே இருப்பதைக் காண, இன்னும் பயம் வந்தது. மெதுவாகப்பின்பக்கம்திரும்பினான். சட்டக்கல்லூரி போலீஸ் ஸ்டேஷன்தான் தெரிந்தது. அங்கே வாயிற்படியில் இன்ஸ்பெக்டர் ஒருவர், நாலைந்து போலீஸ்காரர்களுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் பேசிக்கொண்டே ஆறுமுகத்தை உற்றுப்பார்த்தனர். ஒரே நேரத்தில் எல்லோரும் ஆறுமுகத்தைப் பார்த்தனர். புலிக்குப் பயந்தவன் சிங்கங்களின் குகையில் ஒதுங்கியதுபோல ஆறுமுகம் மிக ஆபத்தான நிலையில் மாட்டிக்கொண்டான்!

அவர்கள் எல்லோரும் தன்னை உற்று நோக்குவதைக் கண்டு திடுக்கிட்ட ஆறுமுகம் வேகமாக நடந்து கூட்டத்தில் நுழைந்தான். குறுக்கும் நெடுக்கும் நடந்து சிறிதுதூரம் போய் திரும்பிப்பார்த்தான். பேப்பர் கடைக்காரனோ, போலீஸ்காரர்களோ அவனைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. அப்பொழுதுதான் அவன் ரத்த ஓட்டம் கொஞ்சம் குறைந்தது. போலீஸ்காரன் பயம் நீங்கியபின், அந்தமாலைப்பத்திரிகைகளில் என்ன எழுதியிருக்கிறது என்பதைப் படிக்கவேண்டுமென ஆவல் அவனுக்கு அதிகமாகியது.

ஆனால் கடையில் போய் அவன் வாங்கும்போது யாராவது அவனை அடையாளம் கண்டுபிடித்துவிட்டால்...!

கடைசியாக ஹைகோர்ட் வாயிற்படி எதிரில் நின்றுகொண்டு பக்கத்திலிருந்த பேப்பர்க் கடையைப் பார்த்தான். ஒரே கூட்டமாக மக்கள் நின்றுகொண்டிருந்தனர். நடைபாதையில் வழக்கப்படிபல பிச்சைக்காரர்கள் "அம்மா! தாயே!" என்ற கூக்குரலை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையில் ஒரு நியூஸ் பேப்பர் பையன் "தினமித்திரன்! ஈவினிங் நியூஸ்!" என்று கத்திக்கொண்டே ஓடிவந்தான். அதுதான் சமயமென்று விளக்கு வெளிச்சத்திலிருந்து கொஞ்சம் மறைந்து நின்றுகொண்டு 'இந்தாப்பா, தினமித்திரன்' என்று இழுத்தான் ஆறுமுகம்.

ஓடிக்கொண்டிருந்த பையன் சட்டென்று திரும்பி, ஆறுமுகத்தைப் பார்த்தான். "என்ன நயினா! என்ன வேணும்?" என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்தான்.

பதில் பேசாமல் ஒரு அணாவை எடுத்துக்கொடுத்தான், ஆறுமுகம்.

"தினமித்திரனா.........?" என்று கூறிக்கொண்டே ஒரு பேப்பரைக் கொடுத்துவிட்டுப் பேப்பர் பையன் ஓடினான்.

ஆறுமுகத்திற்கு பெரிய விடுதலை கிடைத்ததுபோலிருந்தது. பேப்பரை சுருட்டிப் பையில் திணித்தவண்ணம் சைனாபஜாரைத் தாண்டி ஹைகோர்ட்டிற்குள் நுழைந்தான். இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. வேகமாக நடந்து நீதிமன்றத்தின் பின்புறம் சென்று, அங்கு பூட்டப்பட்டிருந்த இரும்புக் கேட்டில்ஏறிப் பீச்சுரோடில் குதித்தான்.

பீச்சிலிருந்து மக்கள் திரள் திரளாக வந்துகொண்டிருந்தனர். கடற்கரைக் காற்றின் குளுமையில் திளைத்துத் திரும்பும் அவர்கள் முக மகிழ்ச்சியோடு இருந்தனர்.

குழந்தைகள் குதித்தோடிவர முன்னால் நடந்த தாய்மாரும், இழைந்து இழைந்து நடந்துவரும் இளந் தம்பதிகளும் அவர்களைப் பார்த்து சிந்தனையை அலையவிட்டுப் பின்னால் செல்லும் வாலிபர்களும், பருவமங்கையரும் இன்னும் எத்தனையோ விதமான கூட்டங்களும் சென்றுகொண்டிருந்தன.

ஆனால் அவர்களைப் பார்த்து ஆறுமுகத்திற்கு ஆனந்த சிந்தனைகளா வரும்? அவனுடைய எண்ணமெல்லாம் தினமித்திரனிலும், பாக்ய பவனத்திலும் மாறி மாறிச் சென்று கொண்டிருந்தது.

"இந்தப் பத்திரிகைக்காரர்கள் என்னென்ன எழுதிவைத்திருக்கின்றார்களோ? இந்நேரம் 'பாக்ய பவன'த்திலே எப்படி எப்படி மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ?

அந்தக் குப்பன் எப்படி அந்த பூட்ஸைக் கண்டுபிடித்தான்? அவர்கள் உண்மையிலேயே உத்தமநாத

ரின் பிணத்தைக் கண்டுபிடித்தனரா?”

இப்படியெல்லாம் சிந்தித்த வண்ணமே பீச் ரோடில் நடந்து கொண்டிருந்தான், ஆறுமுகம்.

இதற்குள் அவனையறியாமலேயே அவன் செகரட்ரியேட்டைக்கூட தாண்டிவிட்டான். மரினா இரும்புப் பாலத்தைத் தாண்டும்பொழுது அவனுக்கு முன்னும் பின்னும் ஆட்களே கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெரியவில்லை. அப்பொழுது தான் அவனுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது.

பக்கத்திலிருந்த எலெக்ட்ரிக் கம்பத்தினடியில் வந்து உட்கார்ந்து கொண்டு பேப்பரை எடுத்தான்.

பிரித்ததுமே அவன் கண்களில் கொட்டை எழுத்தில் போடப்பட்டிருந்த தலைப்புகள் தான்பட்டன.

“கொலையுண்ட பிணம் கண்டு பிடிக்கப்பட்டது!”

“உத்தமநாதரைக் கொன்றவன் யார்?”

“டிரைவர் மறைந்த மாயம்”

“ஆலை முதலாளியின் பரிதாப முடிவு”

என்ற தலைப்புக்களுடன் பத்திரிகையின் முதல் பக்கம் தொடங்கியது. செய்திகளுக்கிடையே உத்தமநாதரின் சவம் அச்சடிக்கப்பட்டிருந்தது. இன்னொரு மூலையிலே அவர் உயிரோடிருந்தபோது எடுத்த படம் ஒன்றும் போடப்பட்டிருந்தது. முதல் பக்கத்தைப் பார்த்து விட்டு இரண்டாம் பக்கத்தைப் புரட்டினான். அதிலே இன்னும் பயங்கரமான படம் ஒன்று போடப்பட்டிருந்தது.

உத்தமநாதரின் படத்தைவிட பெரிதாக வாலிபனின் படமொன்று போடப்பட்டிருந்தது. தலையெல்லாம் பரட்டை. கசங்கிய புஷ்கோட்டு. மெலிந்த கழுத்து. கிட்டப் பார்த்தவுடன் தன் படம்தான் அது என்பதை தெரிந்துகொண்டான். அதற்குக் கீழே ஏதோ எழுதியிருப்பதைக் கண்டு அதைப் படிக்க ஆரம்பித்தான்.

“உத்தமநாதரின் கடைசி இரண்டு நாட்களும் அவருக்கு டிரைவராக இருந்த ஆறுமுகம் இவன்தான்! ஆரம்பத்தில் தொழிற்சங்கத் தலைவர் நல்லமுத்துவை இந்தக் கொலை வழக்கில் இழுத்து விட்டவன். இப்பொழுது மறைந்து விட்டான். இவனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனாம் கொடுப்பதாகப் போலீஸ் இலாகா அறிவித்திருக்கிறது”

இந்தச் சிறிய செய்தியைப் படித்ததுமே ஆறுமுகத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது. திடுக்கிட்டு நாலு பக்கமும் திரும்பிப்பார்த்தான். மரினா கோடியில் பளிச்சென்ற வெளிச்சம் வீச வேகமாக ஒரு கார் வந்து கொண்டிருந்தது. மரீனா காண்டீன் அருகில் வரும்போதே அது ஒரு போலீஸ் லாரி என்பதைக் கண்டு கொண்டான் ஆறுமுகம். மறு வினாடியே சட்டென்று அந்த பேப்பரை மடித்து எடுத்துக் கொண்டு பக்கத்திலிருந்த பூச்செடிகளிக்கிடையே ஓடினான்.

‘வீர்’ என்ற சப்தம் போட்ட வண்ணம் முன்னால் உருண்டோடியது, போலீஸ் லாரி.

சில நிமிடங்களில் அதைத் தூரத்திக் கொண்டே பின்னால் உருண்டோடியது, மற்றொரு கார். காக்கிக் கலரிலிருந்த அந்தக் காரும், ஒரு போலீஸ் காராகத்தான் இருக்க வேண்டும். செடிகளுக்கிடையே விழித்தவிழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஆறுமுகம் திகைத்த நிலையில் வெளியே வந்தான்.

‘போலீஸ் கார்’ என்றவுடன் அவன் ஏன் அப்படிப்பயப்படவேண்டும்? வழக்கம்போல அவன் நடந்திருந்தால் அந்த பீச்சில் அவனை யார், எப்படி அடையாளம் தெரிந்து கொள்ள முடியும்? எதற்கும் முதலில் அந்த பத்திரிகையில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று பார்க்கலாம் என்ற ஆவல் ஆறுமுகத்திற்கு வந்தது.

சுற்றும் முற்றும் பார்த்த வண்ணம் பழையபடி லைட் கம்பத்தினருகிலேயே வந்தான். அப்பொழுதுதான் எதிர்த்தாற்போலிருந்த மணிக்கூண்டு ஏழு மணி அடித்தது.

பேப்பரைப் பிரித்த வண்ணம் இந்த லைட் கம்பத்தடியிலேயே உட்கார்ந்தான். அவனுக்குத் தெரிந்த அரைகுறை தமிழிலே அதிலிருந்த செய்தியைப் படிக்க ஆரம்பித்தான்.

“இரண்டு நாட்களாகக் காணாமல் போயிருந்த மில் முதலாளி உத்தமநாதர், இன்று பிணமாகத்தோண்டி எடுக்கப்பட்டார். அதுவும், அவர் பங்களாத் தோட்டத்திலிருந்தே! உத்தமநாதர் ஏன் இக்கதிக்கு ஆளானார் என்பதை ஆராயும் முன்பே, அவர் கார் டிரைவர், ஆறுமுகம் மாயமாக மறைந்து விட்டான்!” என்ற கொட்டைஎழுத்துக்களில் ஆரம்பம் இருந்தது. இதற்குக் கீழே சிறிய எழுத்துக்களில் ஆரம்பித்த செய்தியை ஆறுமுகம்மிகவும் கஷ்டப்பட்டே படிக்க வேண்டியிருந்தது.

“இரண்டு நாட்களுக்குமுன் ‘உத்தமநாதா டெக்ஸ்டைல்ஸ்’ முதலாளி உத்தமநாதர் திடீரென்று மறைந்ததை வாசகர்களுக்கு முன்பே அறிவித்திருக்கிறோம். இந்த மறைவின் காரணமாக, சந்தேகத்தின் பேரில் தொழிற்சங்கத் தலைவர் நல்லமுத்துவைக் கைது செய்ததும் வாசகர்களுக்கு தெரிந்திருக்கும். இந்த வழக்கில் நல்லமுத்துவைக் கைது செய்தது ஆறுமுகம் என்ற உத்தமநாதரின்கார் டிரைவரின் சாட்சியத்தின் பேரில் தான். நேற்று முன்தினம் இரவு நல்லமுத்துவை பாக்கியபவனத்தில் (உத்தமநாதரின் பங்களா) பார்த்ததாக ஆறுமுகம் சாட்சி கூறியிருந்தான். உத்தமநாதா டெக்ஸ்டைல்லில் சென்ற சில நாட்களாக நடந்த வேலை நிறுத்தம் காரணமாக, நல்லமுத்துவுக்கும் உத்தமநாதருக்கும் மனக்கசப்பு இருந்து வந்தது. ஆகவேதான் அன்றிரவு நல்லமுத்து பாக்கியபவனம் வந்ததும், அவர் வந்த மறுதினம் காலையே உத்தமநாதர் காணாமல் போகவும், அவர் மேலிருந்த சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்தியது. நமது நிருபர் இன்று காலை ஆறுமுகத்தை சந்தித்து கேட்டபோது கூட, ஆறுமுகம் அவன் வாக்குமூலம் சரியென்றே சாதித்தான். இருந்தபோதிலும், நேற்று முன்தினம் இரவு பதினொரு மணிவரை நல்லமுத்து, லேபர் கமிஷனரிடம் பேசிக்கொண்டிருந்ததாக லேபர்கமிஷனரே கூறியபின், போலிஸார், நல்லமுத்துவை விடுதலை செய்தனர்.

(தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.